
மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

மாலை—12



உரையாசிரியர்:

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

(சங்கரனடிமை)

உ

விநாயகர் துதி



திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

(சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிக வெளியீடு)

மாலை—12

உரையாசிரியர் :

சிவபுராண ஞானபூஜகர், சாஸ்த்ர பிரசார பூஷணம், சிவபுராணக் காவலர், சிவபுராணச் சக்கரவர்த்தி

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா

(சங்கரன் அடிமை)



வெளியீடு : 15—10—1982

பிரசுரம் :

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா

5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,

மேலமாம்பலம், சென்னை-600 033.

 1982 [விலை ரூ. 3-00

சைவ சமயாசாரியார்

நால்வர் துதி



திருஞான சம்பந்தர் திருநாவுக் கரசர் சுந்தர மூர்த்திகள் மாணிக்க வாசகர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே.

திருஞானசம்பந்தர்



மறைவளர் திரு, வைதிக நிலை,
வளர்ஞானப் பொறையணி முகில்
புகலியர்புகல், பொருபொன்னித்
துறைபெறுமணி, சுருதியின் ஒளி

திருஞானசம்பந்தர்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்



ஸமர்ப்பணம்

ஓம் கட்வாங்கினே நம:

சிவபெருமானுடைய 108 திருநாமங்களுள் **கட்வாங்கி** என்பது பன்னிரண்டாவது திருநாமம் ஆகும். **கட்வாங்கம்** என்பது ஒரு ஆயுதம். அது உச்சியில் ஒரு மண்டை ஓடு அமையப்பெற்ற ஒரு கனத்த தடி எனக் கூறப்படுகிறது. (A club or staff wi h a skull at the top considered as a weapon of SIVA and carried by ascetics and yogins) இவ்வாறு ஸ்ரீ வாமன் சிவராம் ஆப்தே என்பவர் தொகுத்த ஸம்ஸ்க்ருத அகராதியில் பொருள் காணப்படுகிறது). தமிழில் **கட்டங்கம்** என வழங்கப்படுகிறது. இதற்கு **யோக** தண்டம் என்றதொரு பொருளும் காணப்படுகிறது. இந்த ஆயுதத்தைத் தரிப்பதால் **சிவபிரான் கட்வாங்கி** எனத் துதிக்கப்படுகிறார்.

ஓம் கட்வாங்கினே நம: என்ற இந்தப் **பன்னிரண்டாவது** திருநாம மந்திரத்தால் அருச்சித்துப் பன்னிரண்டாவது ஞானத் தமிழ்மாலையினைச் சிவபெருமானுக்கு அணிவிக்கும் நற்பேறு முந்தை பிறவிகளில் செய்த புண்ணியங்களின் பயனால் பெறுகின்றேன்.

இங்ஙனம்

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா

உரையாசிரியர்

சிவம்

உ
சிவமயம்
ஸ்ரீமஹாதேவ ஜயம்

உரையாசிரியர் பணிவுரை

திருச்சிற்றம்பலம்

நிலமே றியமருப் பின்திரு மாலும் நிலம்படைத்த
குலமே றியமலர்க் கோகன தத்தய னும்கொழிக்கும்
சலமே றியமுடி தாள்கண் டிலர்தந்தை காணஅன்று
நலமே றியபுகழ்ச் சம்பந்தன் காட்டிய நாதனையே.

திருச்சிற்றம்பலம்

—ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி—16
—(நம்பியாண்டார் நம்பிகள் அருளியது — 11-ம் திருமுறை)

திருமாலும் நான்முகனும் திருவடியும், திருமுடியும் காண முடியாத நாதனை தந்தையார் காணும்படி திருஞான சம்பந்தர் குளக்கரையில் காட்டினர் என்பது மேலே காட்டிய பாடலின் கருத்தாகும். இத்தகைய பெருமை பொருந்திய திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருப்பதிகங்களை அவரது தலயாத்திரை முறையில் உரையுடன் வெளியிடுத லாகிய இந்த ஞான வேள்வியில் திருப்பூந்தராய், திருப்புகலி என்ற சீகாழித் தலத்தின் இரு பெயர்களில் பாடப்பெற்ற பதிகங்களை முறையே 10, 11-வது தமிழ் மாலைகளில் வெளி யிட்டோம். இந்த 12-வது தமிழ் மாலையில் சீகாழியின் மற்ற பெயர்களில் திருத்தோணிபுரம், திருவேணுபுரம், திருச்சிரபுரம் ஆகிய மூன்று பெயர்களில் பாடியருளிய பதிகங்களை உரையுடன் வெளியிடுகின்றோம். 5-7-1982ல் 11-வது தமிழ் மாலை வெளியிட்ட பிறகு இப்பொழுது 12-வது

தமிழ் மாலை வெளியிட இயன்றது திருவருளின் செயலே யாகும். மேலும் இனித் தொடர்ந்து மாலைகள் இன்னும் விரைவான காலவளவில் வரக்கூடிய வாய்ப்புகள் நாளும் பெருகிக்கொண்டே வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்தப் பன்னிரெண்டாவது தமிழ் மாலையில் வந்துள்ள திருப்பதிகங்களுக்கு உரைஎழுதி வருகையில் எமக்கு ஏற்பட்ட சில ஐயங்களுக்குச் சிறந்த முறையில் விளக்கங்கள் எழுதி அனுப்பி உதவிய இராணிப்பேட்டை நக்கீரன் வழியடிமை சைவசித்தாந்தச் செம்மல் உயர்திரு பி. மா. சோமசுந்தரனுர் அவர்களுக்கும், எரியோம்புதல் பற்றிய சில ஐயங்களை விளக்கிய பிரம்மஸ்ரீ மஞ்சக்குடி K. ராஜகோபால சாஸ்திரிகளுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்

சங்கரனடிமை

சென்னை — 33
25-9-1982

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா
பதிப்பாசிரியர்—உரையாசிரியர்.

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்



மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை-12

திருஞானசம்பந்தர் அருளியவை

(தொடர்ச்சி)

திருத்தோணிபுரம்-1

(சீகாழி)

பதிக வரலாறு : திருத்தோணிபுரம் என்ற பெயரில் சீகாழியில் பாடியருளிய மூன்று திருப்பதிகங்களில் வண்டரங்கப் புனற்கமல எனத்தொடங்கும் பழந்தக்கராகப் பதிகம் ஆணியாம் திருப்பதிகம் என்ற தலைப்பில் நமது 3-வது தமிழ் மாலையில் வெளியிடப்பட்டுள்ளது. மற்ற இரண்டு திருப்பதிகங்கள் மட்டும் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன. பிரளய காலத்தில் உலகம் அழிந்தபோது இத்தலம் தோணியாக மிதந்து அதில் அம்மையப்பர் எழுந்தருளப் பெற்றமையால் தோணிபுரம் எனப் பெயர் பெற்றது.

பண்: சாதாரி] திருவிராகம் [3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சங்கமரு முன்கைமட மாதையொரு
பாலுடன் விரும்பி
அங்கமுடல் மேலுறவ ணிந்துபிணி
தீரவருள் செய்யும்
எங்கள்பெரு மானிடமெ னத்தகுமு
னைக்கடலின் முத்தம்
துங்கமணி இப்பிகள் கரைக்குவரு
தோணிபுர மாமே. 1

பதிகப்பொழிப்புரை: 1. சங்குவளையல் பொருந்திய முன் கையினையுடைய உமாதேவியாரைத் தன்னுடன் உடம்பின் ஒரு பாகத்தில் விருப்பத்துடன் அமர்த்திக் கொண்டும், எலும்பைத் தனது உடம்பின்மீது நன்கு பொருந்தும்படி அணிந்துகொண்டும் (தன்னைத் தியானிப்பவரது) பிணிகள் தீரும்படி அருள்புரிகின்ற எங்கள் பெருமானாகிய சிவ பிரானரது உறைவிடம் எனத் தகுதியுடையது, முனைந்து அலைகள் வீசுதலையுடைய கடலினின்றும் முத்துக்களும், உயர்வுடைய இரத்தினங்களும், சங்குப் பூச்சிகளும், கரைக்கு வந்து சேருகின்ற திருத்தோணிபுரம் ஆகும்.

அங்கம் இங்கு எலும்புக் கூட்டைக் குறித்தது. இறைவனர் எலும்புக் கூட்டினைத் தமது உடம்பின் மீது அணிந்து கொண்டது பற்றிக் கூறும் திருவாசகப்பாடல் காண்க:

நங்காயி தென்னதவம் நரம்பொ டெலும்பணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செல்லத் தரித்தனன்காண் சாழலோ.

—திருவாசகம்: திருச்சாழல்—11

மடமாது — மடமையுடைய மாது. மடமை என்பது பெண்களின் நான்கு குணங்களில் ஒன்று. மற்ற மூன்றும் அச்சம், நாணம், பயிர்ப்பு என்பனவாம் இவை நான்கினை யும் பெண்களுக்குப் படையாகக் கூறுவர். ''நாற்குணமும் நாற்படையா .....''என்பது நளவெண்பா.

மடம் என்பதற்கு அழகு, இளமை என்றும் பொருள் உளவாகையால் அழகுடையமாது, இளமை மாறுத மாது எனக் கொள்ளினும் சிறப்புடையதேயாம். உமாதேவி யாருக்கு உரைக்கும் போது இப்பொருளே சிறந்ததாகும்.

பிணி — உடற்பிணிமட்டுமன்றி உயிரைப் பிணித்துள்ள மலப் பிணிப்புமாம்.

இறைவனுர் உமாதேவியாரை ஒரு பாகத்தில் கொண் டுள்ளதும் இறந்த பிரம விஷ்ணுக்களின் எலும்பைச் சுமப்ப தும் தம்மை வழிபடும் அடியவரது பிணிகளைத் தீர்த்தருள் செய்வதற்கேயாம் என்பது கருத்து. உமாதேவியாரை ஒரு பாகத்தில் கொண்ட மூர்த்தி அர்த்தநாரீச்வரர் என்றும் எலும்பினைத் தரித்த மூர்த்தி கங்காள மூர்த்தி என்றும் வழங்கப்படும்.

சல்லரியி யாழ்முழவம் மொந்தைகுழல்
தாளமதி யம்பக்
கல்லரிய மாமலையர் பாவையொரு
பாகநிலை செய்து
அல்லெரிகை யேந்திநட மாடுசடை
அண்ணலிட மென்பர்
சொல்லரிய தொண்டர்துதி செய்யவளர்
தோணிபுர மாமே. 2

2. சல்லரி, யாழ், முழவம், மொந்தை, குழல், தாளம் முதலிய வாத்தியங்கள் ஒலிக்க, பெரிய மலையாகிய இமய மலையரசின் அரிய மகளாகிய உமாதேவியாரைத் தமது ஒரு பாகமாக என்றும் பிரியாமற்கொண்டு, கையினில் அனலை

ஏந்தி இரவில் நடனமாடுகின்ற, சடைமுடியையுடைய பெருமானாகிய சிவனாரதுஇடம், சொல்லுதற்கரிய பெருமையுடைய தொண்டர்கள் துதி செய்கின்றதும், என்றும் வளர்ந்து கொண்டிருப்பதுமான திருத்தோணிபுரம் ஆகும் என்று (பெரியோர்) கூறுவர்.

சல்லரி — கைத்தாளம் போன்று பெரிய அளவில் உள்ள இரு தாளங்களைக் கைக்கு ஒன்றாக வைத்துக்கொண்டு அடிக்கும் வாத்தியம். மணியினோசை போல இசைக்கும். பம்பை மேளம் என்றும் பொருள் காணப்படுகிறது.

யாழ்—வீணை; முழவம்—மத்தளம், பறை.

மொந்தை — ஒரு பக்கம் கண் உடைய பறை; குழல்—புல்லாங்குழல். பெரும்பாலும் மூங்கிலால் செய்யப்படுவது. அதனாலேயே அதன் இசை வேணுகானம் (வேணு—மூங்கில்) எனப்படும். தாளம்—கைத்தாளம்

இறைவனார் மஹாசங்கார காலத்தில் கூத்தாடுவதையே இரவில் நடனமாடுதல் என்று கூறினார். அக்காலம் எங்கும் இருள் மயமாய் இருக்குமாதலின் அங்ஙனம் கூறப்படுகின்றது. "நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே' என்ற திருவாசகமும் இக்கருத்தினையே கொண்டதென்க.

அண்ணல் — பெருமையிற்சிறந்தவன், தலைவன்.

வண்டரவு கொன்றைவளர் புன்சடையின்
மேல்மதியம் வைத்துப்
பண்டரவு தன்னரையி லார்த்தபர
மேட்டிபழி தீரக்
கண்டரவ வொண்கடலின் நஞ்சமமு
துண்டகட வுள்ளூர்
தொண்டரவர் மிண்டிவழி பாடுமல்கு
தோணிபுர மாமே 3

3. வண்டுகள் மோதி ஊதுகின்ற கொன்றை மாலையையும், பிறைச்சந்திரனையும் வளர்தலையுடைய சடையின் மேல்

வைத்து, பண்டைக்காலத்தில் தனது அரையில் பாம்பினைக் கச்சாகக் கட்டிய பரமேட்டியாகிய சிவபிரான், திருமால் முதலியோர் தனது அருளின்றி அமுதம் கடையச் சென்ற குற்றம் தீரும்படித் திருவருள் நோக்கம் வைத்தருளி அலைகளின் ஆரவாரத்தையுடைய சிறந்த பாற்கடலினின்றும் எழுந்த நஞ்சினை அமுதமென உண்ட கடவுளாவர். அவரது ஊர், திருத்தொண்டர்கள் நெருங்கி நிறைந்து செய்யும் வழிபாடுகள் மிகுந்த **திருத்தோணிபுரம்** ஆகும்.

பண்டு — பண்டைக்காலம். அதாவது எக்காலத்தில் கருடனுக்கஞ்சிய பாம்புகள் இறைவனைச் சரணமடைந்தனவோ, எக்காலத்தில் தாருகவனத்து இருடியர் தீய வேள்வியினின்றும் உண்டாக்கிய பாம்புகளை இறைவன் அணிகலன்களாகக் கொண்டாரோ அக்காலம் என்று இறைவனரது பாம்பணிந்த கோலத்தின் தொன்மையினைக் குறித்தருளினர் என்க.

பழிதீர — இச்சொற்றொடர்க்கு, "(திருமால் முதலியோர் இறைவனுணையின்றிக் கடல் கடையச் சென்ற) தோடம் அவரை விட்டு நீங்குமாறு" என்ற பொருள் திருத்தருமையாதீனக் குறிப்புரையில் காணப்படுகிறது. இது பற்றி இராணிப்பேட்டை புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனர் அவர்கள் நமக்கு எழுதியனுப்பிய குறிப்பில் பனிதீர என்ற பாடம் ஏடெழுதுவோரால் பழிதீர என்றாக்கப் பட்டதோ என்று ஐயப்படுவதாகவும், எனினும் திருமுறைகளை நம் மனம் போனவாறு திருத்த நமக்குரிமையின்மையால் உள்ளவாறே பொருள் கூறி அமைதி காணவேண்டும் என்றும், எனவே பழிதீர என்பதற்குக் கந்த புராணத்தில் திருமால் கூற்றாக வரும்

"அன்னமென் கொடியினன் அனைய ரோடுபோந்(து)
என்னொடு கூறினன் யானெ ழுந்தரோ
உன்னருள் பெற்றிலன் உணர்ந்தி டாமலே
மன்னிய அமிழ்திவண் வருதல் வேண்டினேன்"

என்பதையே கூறி அமைதி காணல் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். "இறைவனருள் பெறுது அமிர்தம் கடையச் சென்ற குற்றம் தீர" என்னும் பொருளே இதனுலும் கிடைக்கின்றது.

ஆயினும் பழிதீர என்பதற்கு தீங்கு நீங்கும்படி, அதாவது விடத்திஞல் தேவர்க்கும் மற்றையோர்க்கும் வரக்கடவதான தீங்கு தீரும்படி என்றதொரு பொருளும் எமக்குத் தோன்றுகிறது. பழி என்னும் சொல்லுக்குப் பொல்லாங்கு அல்லது தீங்கு என்ற பொருளும் காணக் கிடைத்தது அங்ஙனங் கொள்ளக்காரணமாகியது. ஞானத்தமிழாகரரது திருவுள்ளக் கிடக்கை யாது என்பதை யாரே உறுதியாகக் கூறவல்லார்?

பனிதீர என்பது பாடமாக இருக்கக் கூடுமாயின் பனி என்னும் சொல் அச்சம், நடுக்கம், துன்பம் முதலிய பொருள்களைத் தரும் என்பதும் இங்குக் கருதற்பாலது.

கொல்லைவிடை யேறுடைய கோவணவன்
நாவணவு மாலை
ஒல்லையுடை யானடைய லாரரணம்
ஒள்ளழல் விளைத்த
வில்லையுடை யான்மிக விரும்புபதி
மேவிவளர் தொண்டர்
சொல்லையடை வாகஇடர் தீர்த்தருள்செய்
தோணிபுர மாமே. 4

4. முல்லை நிலத்திலுள்ள இடபவாகனத்தையுடைய, கோவண ஆடையினையுடையவனும், அடியார்கள் தமது நாவிஞல் பாடும் பாமாலைகள் பொருந்துதலையுடையவனும், பகைவரது மதில்களை எரியும்படி ஒளி பொருந்திய தீயினை விளைவித்த வில்லையுடையவனுமாகிய சிவபிரான் மிகவும் விரும்பி எழுந்தருளியபதி யாதெனில், இறைவனையே பற்றுக் கோடாக அடைந்து பக்தியானது மேலும் மேலும் வளர்தலை

யுடைய தொண்டர்களது சொற்களாகிய வேண்டுகோள் களைக் காரணமாகக் கொண்டு அவர்களது துன்பங்களைத் தீர்த்து அருள் செய்கின்ற திருத்தோணிபுரம் ஆகும்.

கொல்லைவிடை — கொல்லை என்பது முல்லை நிலத்தைக் குறிக்கும். முல்லை நிலம் என்பது காடும் காடு சார்ந்த இடமுமாகும். இதற்குத் தெய்வம் திருமால். திருமாலும் ஒரு சமயம் இடபவாகனமாகி இறைவனார் ஏறுதற்கு நின்ற மையால் கொல்லைவிடை எனக் கூறியருளினார் என்க.

இறைவனைச் செங்கண் மால் விடையான் எனக் கூறும் வழக்கும் காண்க.

நாவணவு மாலை — நா + அணவு + மாலை; அணவுதல் - பொருந்துதல். நாவில் பொருந்தும் மாலை பாமாலையாம்.

ஒல்லையுடையான் — ஒல்லுதலையுடையான். ஒல்லுதல் - இணங்குதல், பொருந்தல் போன்ற பொருட்களைத் தரும் சொல். இவ்வாறின்றி ஒல் என்ற ஒலிக்குறிப்பினையுடையான் எனக் கூறினர் திருத்தருமபுர ஆதீனக் குறிப்புரையாசிரியர்.

அடையலார் அரணம் — பகைவர்களாகிய முப்புரத்து அசுரர்களின் மும்மதில்களைக் குறித்தது.

அழல் விளைத்த வில் — தீயினை உண்டாக்க அம்பு எய்யக் கருவியாக அமைந்த வில். இறைவர் மேருமலையினை வில்லாகக் கொண்டனர் என்பது வரலாறு.

தொண்டர் சொல் — தொண்டர்கள் இறைவனை வேண்டிக் கொள்ளும் சொற்கள்.

தேயுமதி யஞ்சடையி லங்கிடவி
லங்கன்மலி கானில்
காயுமடு திண்கரியின் ஈருரிவை
போர்த்தவன் நினைப்பார்

தாயென நிறைந்ததொரு தன்மையினர்
நன்மையொடு வாழ்வு
தூயமறை யாளர்முறை யோதிநிறை
தோணிபுர மாமே. 5

5. கலைகள் தேய்ந்து வருகின்ற பிறைச் சந்திரன் சடையில் விளங்க, மலைகள் மிக்க காட்டில் திரிகின்ற கோபித் தலையும், கொல்லுதலையுமுடைய வலிய யானையின் உரித்த தோலைப் போர்த்தவனும், தன்னையே சிந்தித்து இருப்பவர்களுக்குத் தாயினைப் போல கருணை காட்டி எங்கும் நிறைந்ததொரு தன்மையினருமாகிய சிவபிரானார், அடியவர்க்கு நன்மை புரிதலையே தமது கடனாகக் கொண்டு வாழ்கின்ற இடம், தூய்மையுடைய வேதியர்கள் வேதங்களை ஓதி நிறைகின்ற திருத்தோணிபுரம் ஆகும்.

விலங்கல் — மலை; **காயும்** — கோபிக்கின்ற.

இறைவனார் உரித்தது யானையுருவமுடைய கஜாசுரன் என்னும் அவுணனாயினும், யானை என்ற பொதுமை பற்றி கானிற் காயுமடு திண்கரி என அருளிச் செய்தனர் என்று கொள்க.

நினைப்பார் – சிந்திப்பார். "தம்மையே சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்......" என்று திருஞானசம்பந்தர் திருப்பாசுரம் மூன்றாவது திருப்பாடலில் அருளிச் செய்துள்ளதும் இங்கு கருதற்குரியது.

நன்மையொடு வாழ்வு — நன்மை செய்வதைத் தொழிலாகக் கொண்டு வாழுமிடம்.

தூய மறையாளர் – உள்ளும் புறமும் தூயவர், மறை பயின்றவர்.

முறை யோதி — முறையாக நூல்களை ஓதி என்பதாம். அல்லது முறை என்ற சொல்லுக்கே நூல் என்ற பொருள் உண்மையால் நூல்களை ஓதி என்று எம்மால் பொருள் கூறப்பட்டது. சைவத் திருமுறைகள் என்று வழங்குதல் காண்க.

நிறை தோணிபுரம் —மறையாளர் நிறைந்த தோணிபுரம் என்பதாம். அல்லது தூயமறையாளர் முறையோதி அதனால் அவர்கள் நிறைவு பெற்ற தோணிபுரம் எனவும் கொள்ளலாம்.

பற்றலர்தம் முப்புரமெ ரித்தடி
பணிந்தவர்கள் மேலைக்
குற்றமதொ ழித்தருளு கொள்கையினன்
வெள்ளின்முது கானில்
பற்றவனி சைக்கிளவி பாரிடம
தேத்தநட மாடுந்
துற்றசடை அத்தனுறை கின்றபதி
தோணிபுர மாமே. 6

6. பகைவர்களது முப்புரங்களையுமெரித்தும், தனது திருவடிகளைப் பணிந்தவர்களது மேலைக் குற்றங்களை ஒழித்தும் திருவருள் புரிகின்ற கொள்கையினையுடையவனும், பாடைகள் மலிந்த மயானத்தில் பற்றுடையவனும், பூத கணங்கள் பலவிதமான இசைப்பாடல்களால் துதித்துப் பாடத் தான் நடனமாடுதலையுடைய அடர்ந்த சடையினை உடைய அத்தனாகிய சிவபிரான் உறைகின்ற பதி திருத் தோணிபுரம் ஆகும்.

பற்றலர் — பற்று இல்லாதவர் என்பதால் பகைவர். (காரணப்பெயர்).

மேலைக்குற்றம் — முற்பிறவிகளில் செய்து இதுவரை எடுத்த பிறவிகளில் நுகர்ந்து கழிந்ததுபோக எஞ்சியுள்ள வினைகள்.

வெள்ளில் — பாடை (பிணந்தாங்குங் கருவி), விளாமரம் எனவும் பொருள் கொள்ளலாம்.

இசைக்கிளவி — இசைப்பாடல்கள்.

பாரிடம் — பூத கணங்கள்; பூத கணங்கள் தன்னைச் சூழ்ந்து நின்று இசைக்கிளவிகளைப் பாட மயானத்தில் நட

மாடும் துற்ற சடை அத்தன் என்று பொருள் முடிவு செய்து கொள்க.

துற்ற சடை — நெருங்கிய அதாவது அடர்ந்து வளர்ந்த சடை.

அத்தன் — தந்தை, அனைத்துயிர்க்கும் தந்தையாகிய சிவபெருமான்.

பண்ணமரு நான்மறையர் நூன்முறை
    பயின்றதிரு மார்பில்
பெண்ணமரு மேனியினர் தம்பெருமை
    பேசுமடி யார்மெய்த்
திண்ணமரும் வல்வினைகள் தீரவருள்
    செய்தலுடை யானூர்
துண்ணென விரும்புசரி யைத்தொழிலர்
    தோணிபுர மாமே. 7

7. இசைபொருந்திய நான்கு வேதங்களையருளியவரும் ஆகம சாத்திரங்களின் முடிவான கருத்தை மோன முத்திரையால் தெரிவித்தருளிய திருமார்பினையும், உமாதேவியார் ஒரு பாகத்தில் தங்கிய திருமேனியையுமுடையவரும், தமது பொருள் சேர் புகழ்களைப் பாடித்துதிக்கும் உண்மையான அடியவர்களது திண்மை பொருந்திய வலிய வினைகள் யாவும் திரும்படி அருள் செய்தலையுடையவருமாகிய சிவபிரானுரது ஊராவது, சரியையாதி தொழில்களைத் துண்ணெனச் செய்வதை விரும்புகின்றவர்கள் வாழ்கின்ற திருத்தோணிபுரம் ஆகும்.

நூன்முறை பயின்ற திருமார்பு — பயின்ற என்னும் தன் வினையைப் பயிற்றிய என்னும் பிறவினையாக்கொண்டு தெரிவித்தருளிய எனப்பொருள் கொள்க. நூன் முறை என்பது ஆகம சாத்திரங்களின் கருத்து எனப்படுகிறது. இதைத் தெரிவித்தருளிய மார்பு என்பதைப் பின்வரும் கந்தபுராணச் செய்யுளால் அறிக.

இருவரும் உணரா அண்ணல்
ஏனவெள் எயிறு ஆமை
சிரம்நிறை அனந்த கோடி
திளைத்திடும் உரத்தில் சீர்கொள்
கரதலம் ஒன்று சேர்த்தி
மோன முத்திரையைக் காட்டி
ஒருகணம் செயல் ஒன்றின்றி
யோகு செய்வாரின் உற்றார்.

—கந்தபுராணம், உற்பத்திக் காண்டம்
மேருப்படலம்—12

(இதன் பொருள்) அடிமுடி தேடிய பிரமதேவனும் திருமாலும் அறிதற்கு அரியவராகிய பெருமான் பன்றிக் கோடும், ஆமை ஓடும், மண்டை மாலையும் கோடி கோடியாகப் பொருந்திய திருமார்பில் ஒரு கரத்தை வைத்து ஞானமுத்திரையைக் காட்டி, ஒரு கணப் பொழுது யாதொரு செயலுமின்றி யோகியரைப் போல் இருந்தார்.

அடியார் மெய்த்திண்ணமரும் வல்வினை என்பதை மெய்யடியார் திண்ணமரும் வல்வினை என்று மாற்றிப் பொருள் உரைக்கப்பட்டது.

திண்ணமரும் வல்வினை — வலிமை பொருந்திய வல்வினைகள் அதாவது பிறரால் எளிதில் தீர்க்க இயலாத கொடிய வினைகள் என்பதாம்.

சரியைத் தொழிலர் — கைத்தொண்டு செய்யும் அடியவர்கள். சரியை என்பதை உபலட்சணமாகக் கொண்டு அதன் இனமான கிரியை, யோகம், ஞானம் என்பனவற்றையும் கொள்க.

துண்ணென — விரைவுக் குறிப்பு. விரைவுடன் பணி செய்தலில் விருப்புடையவரே மெய்த்தொண்டர். எனவே துண்ணென விரும்பு சரியைத் தொழிலர் எனக் கூறியருளினர் என்க.

துண்ணென என்பதை அச்சக் குறிப்பாகக் கொண்டு (எங்குக் குற்றம் நேர்ந்து விடுகிறதோ என்ற) அச்சத்தோடு பணியை மேற்கொண்டவர் எனப் பொருளுரைத்தனர் திருத்தருமையாதீனக் குறிப்புரையாசிரியர். பொருந்து மேல் கொள்க.

தென்திசையி லங்கையரை யன்திசைகள்
வீரமவிளை வித்து
வென்றிசை புயங்களை அடர்த்தருளும்
வித்தகனி டஞ்சீர்
ஒன்றிசையி யற்கிளவி பாடமயி
லாடவளர் சோலை
துன்றுசெய வண்டுமலி தும்பிமுரல்
தோணிபுர மாமே. 8

8. தென்திசையிலுள்ளதாகிய இலங்கைக்கு அரசனாகிய இராவணனது அனைத்துத் திசைகளிலும் (திக்விஜயம் செய்து) தனது வீரத்தை நிலைநாட்டி வெற்றி கொண்ட ஒன்றையொன்று ஒத்ததான தோள்களை நெருக்கி (பின்னர்) அருளும்புரிந்த சதுரப்பாடுடையவனான சிவபிரானது இடம், தாள ஒத்துக்கு இசைந்த இசை பொருந்திய பாடல்களைக் குயில்கள் பாட, மயில்கள் ஆட வளருந்தன்மையுடைய சோலைகளில் நெருங்குகின்ற வண்டுகளும், மிகுந்த தும்பிகளும் சுருதி கூட்டுவது போல் முரலுகின்ற திருத்தோணிபுரம் ஆகும்.

மயில்கள் ஆட என்பது கொண்டு பாட என்பதற்குக் குயில்கள் எழுவாயாக வருவித்து உரைக்கப்பட்டது.

"...கொய்யுலா மலர்ச்சோலை குயில் கூவ மயில் ஆலும் ஆரூரரைக் கையினாற்றொழாதொழிந்து கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வனேனே" என்ற அப்பரடிகளின் வாக்கும் இங்குக் கருதற்குரியது. (4 ம் திருமுறை — திருவாரூர் — காந்தாரப்பண் — மெய்யெலாம் வெண்ணீறு எனத்

தொடங்கும் திருப்பாடல்) ஆனுதல்—அசைந்தாடுதல் என்ற பொருளில் வந்தது.

சோலைகளில் குயில் பாடுகிறது, மயில் ஆடுகிறது. அதைக் காணவரும் சபையினர் போல் வண்டுகள் நெருங்குகின்றன. தும்பிகள் முரல்கின்றன இத்தகைய சோலைகளை உடைய திருத்தோணிபுரம் என்று கூறியருளியதாகக் கொள்க.

வண்டு என்றும், அதே பொருள் தரும் தும்பி என்றும் தனித்தனியாகக் கூறியமையால் தும்பி என்பது வண்டின் ஒரு வகை எனக் கொள்ளலாம். இவை தேன் குடித்தற் பொருட்டுச் சோலைகளில் மலர்களைச் சுற்றி முரலும். இந்த ஓசையினை "ஹ்ரீங்காரம் (இரீங்காரம்)," என்றும் சொல்வர்.

மலர்களில் தேன் உண்ணும் வண்டினைக் கோத்தும்பி (அரச வண்டு) எனத் திருவாசகத்திலும் கூறியுள்ளது காண்க. திருக்கோத்தும்பி என்றே ஒரு பதிகம் உள்ளது அறிந்ததே யன்றோ?

நாற்றமிகு மாமலரின் மேலயனும்
நாரணனும் நாடி
ஆற்றலத னல்மிக வளப்பரிய
வண்ணமெரி யாகி
ஊற்றமிகு கீழுலகும் மேலுலகும்
ஓங்கியெழு தன்மைத்
தோற்றமிக நாளுமறி யானுறைவு
தோணிபுர மாமே. 9

9. மணம்மிக்க தாமரை மலரின் மேலுள்ள பிரமதேவனும், நாராயணனும், தேடுதற்கு முயன்று தங்களது ஆற்றலால் அளந்தறிவதற்கு மிகவும் அரியதாகும்படி தீப்பிழம்பாகி, உற்ற இடத்தையும் கீழுலகு மேலுலகு ஆகியவற்றை வியாபித்து ஓங்கியெழுந்த தன்மையதாகிய தோற்றத்தையும் ஒரு நாளும் (அவர்கள்) அறிதற்கரியானாகிய கடவுள் (சிவபெருமான்) வாழுமிடம் திருத்தோணிபுரம் ஆகும்.

ஊற்றம் — பற்றுக்கோடு. அதாவது தீப்பிழம்பு ஆரம்பித்த இடம்.

ஊற்றமிகு......தோற்றம் — மாலும் அயனும் தீப்பிழம்பின் ஆதியையும் அறிந்திலர்; அந்தத்தையுமறிந்திலர். அதாவது தீப்பிழம்பு எங்குத் தோன்றியது எங்கு முடிவு அடைந்தது என்று அறிதற்கரியதாய் கீழுலகும் மேலுலகும் ஓங்கியெழு தன்மைத் தோற்றமாகியது எனக் கொள்க.

முடுதுவ ராடையினர் வேடநிலை
காட்டுமமண ஆதர்
கேடுபல சொல்லிடுவ ரம்மொழிகெ
டுத்தடைவி னனக்
காடுபதி யாகநட மாடிமட
மாதொடிரு காதில்
தோடுகுழை பெய்தவர்த மக்குறைவு
தோணிபுர மாமே. 10

10. உடலை முடி மறைக்கின்ற (முழுவதும் போர்த்துக் கொள்கின்ற) துவராடையுடைய பௌத்தர்களும் தமது வேடமாகிய ஆடையணியாத் தன்மையினைப் போலவே தமது அறிவும் எனக் காட்டும் அறிவிலிகளாகிய சமணர்களும் தீமை விளைவிக்கக்கூடிய பல சொற்களைக் கூறிடுவர். எனவே அவர்களது தீய மொழிகளை நீக்கி, மயானமாகிய அக்காட்டினைத் தனது இருப்பிடமாகக் கொண்டு, அங்கே நடனமும் ஆடி, உமையம்மையாரொடு கூடி, இருகாதுகளிலும் முறையே தோடும் குழையும் அணிந்தவராகிய சிவபிரானுக்கு உறைவிடம் திருத்தோணிபுரம் ஆகும். அதனையே அடைவினல் சென்றடையுங்கள் என்று கூறி அருளியதாகக் கொள்க.

சமணரும் பௌத்தரும் கூறும் மொழிகள் தீமைக்கே காரணமாவன. அவற்றை விடுத்துத் தோணிபுரத்தை அடைந்து நம்பெருமானை அடையுங்கள் என்று உலகர்க்கு

உபதேசித்தருளியது கண்டு கொள்க. அடைவினல் — முறைப்படி.

இவ்வாறின்றி, "ஆதர் கேடு பல சொல்லிநவர். அடைவினன் (சிவபிரான்)...... தமக்கு உறைவு திருத்தோணிபுரம் ஆகும்" எனவும் பொருள் கொள்ளலாம். அடைவினன் ஆகிய சிவபிரானது பெருமை "அக்காடு பதி என்பது முதல் தோடு குழை பெய்தவர்" என்பது வரை கூறப்பட்டதாகக் கொள்க.

காடுபதி — "கோயில் சுடுகாடு" எனத் திருவாசகத் துள்ளும் வருதல் காண்க. திருவாசகம் — திருச்சாழல்) 3-ம் பாடல்)

துஞ்சிருளின் நின்றுநட மாடிமிகு
தோணிபுர மேய
மஞ்சனைவ ணங்குதிரு ஞானசம்
பந்தனசொல் மாலை
தஞ்சமென நின்றிசைமொ ழிந்தவடி
யார்கள்தடு மாற்றம்
வஞ்சமிலர் நெஞ்சிருளும் நீங்கியருள்
பெற்றுவளர் வாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. அனைத்துலகும் ஒடுங்கிய பிரளயம் எனப்படும் பேரிருளில் நின்று நடம் ஆடுதலைச் செய்தவனும், புகழ் மிகுந்த திருத்தோணிபுரத்தை விரும்பி யெழுந்தருளியவனுமான சிவபெருமானை வணங்குகின்ற திருஞானசம்பந்தனது சொல் மாலைகளே தமக்குத் தஞ்சம் என்ற கருத்தில் நிலைத்து நின்று இந்த இசைத்தமிழை மொழிந்த (ஓதுதலைச் செய்த) அடியவர்கள் நெறி தவறுதலும், வஞ்சனையும் இல்லாதவர்கள் ஆவர். நெஞ்சில் உள்ள அறியாமை என்ற இருளும் நீங்கி இறைவனது அருள் பெற்று வளர்வார்கள் என்பதாம்.

தஞ்சம் — பற்றுக்கோடு, அடைக்கலம்.

பிறவியென்னும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத் தோல் தோணி போல்வது திருஞானசம்பந்தரின் ஞானத் தமிழ் என்று உறுதியாக நம்பி அத் தமிழ்மாலை ஓதும் அடியவர்கள் தடுமாற்றம், வஞ்சனை இலராகி, நெஞ்சிருளும் நீங்கப் பெற்று சிவனருளும் பெற்று வளர்வர் என்பதாம்.

"தடுமாற்றம் வஞ்சம் என்பது நெறி தவறுதலையும் அதற்குக் காரணமாகிய மாயையையும் குறித்தது எனவும் நெஞ்சிருள் என்றது ஆணவ மலத்தைக் குறித்தது எனவும், எனவே ஆணவ, மாயை இலராகி, ஏனைய கன்ம மலமும் தொலையப் பெற்று, அருள்பெற்று வளர்வார்" என்பது இப் பகுதிக்குத் திருத்தருமையாதீனக் குறிப்புரையாசிரியரின் கருத்தாகக் காணப்படுகிறது.

மஞ்சன்—மகன் என்ற பொதுப்பொருள் தரும் மைந்தன் என்ற சொல்லைப் போலவே இங்குச் சிறப்பாகச் சிவபிரானைக் குறித்தது. மைந்து — வலிமை, அழகு எனவே இவற்றை உடையவன் மைந்தன் என்பது போலவே மஞ்சு—வலிமை, இளமை, அழகு இவற்றையுடையவன் மஞ்சன் எனக் கொள்க

சிவம்

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

திருத்தோணிபுரம்—2

(சீகாழி)

பண்—பழம்பஞ்சுரம்] திருச்சிற்றம்பலம் [3-ம்திருமுறை

கரும்பமர் வில்லியைக் காய்ந்து காதற்
காரிகை மாட்டருளி
அரும்பமர் கொங்கை ஓர்பால் மகிழ்ந்த
அற்புதஞ் செப்பரிதால்
பெரும்பகலேவந்தென் பெண்மை கொண்டு
பேர்த்தவர் சேர்ந்த இடம்
சுரும்பமர் சோலைகள் சூழ்ந்த செம்மைத்
தோணி புரந்தானே. 1

பதிகப்பொழிப்புரை: 1. கரும்பினை வில்லாகக் கொண்ட மன்மதனைக் கோபித்து (நெருப்புக் கண்ணால் எரித்து) பின்னர் அவனது அன்பிற்குரிய மனையாளாகிய இரதியானவள் வேண்ட அவளுக்கருள் செய்து, கோங்கின் அரும்பு போன்றதான கொங்கைகளையுடைய உமாதேவியாரை ஒரு பக்கத்தே வைத்து மகிழ்ந்த அற்புதம் செப்புதற்கரியதாகும். நண்பகலிலேயே வந்து எனது பெண்மை நலத்தைக் கவர்ந்து கொண்டு திரும்பவும் அவர் சென்று சேர்ந்த இடம் வண்டுகள் விரும்பியுறைகின்ற சோலைகள் சூழப்பெற்ற செம்மை வாய்ந்த திருத்தோணிபுரம் ஆகும்.

கரும்பமர் வில்லி—மன்மதன்; காதற்காரிகை—அவனது அன்பிற்குரிய இரதி தேவி. அவளுக்கருள் செய்ததாவது, எரிக்கப்பட்ட மன்மதன் உயிர்பெற்றெழத் திருவருள் செய்து, இரதி தேவிக்கு மட்டும் உருவுடனும் மற்றையோர்க்கு அருவமாகவும் இருக்கக்கடவன் என்று பணித்தமையாம். இச்செய்தியின் விரிவு கந்தபுராணத்துள் காண்க.

கொங்கை — சினையாகு பெயராய் அம்பிகையை உணர்த்திற்று.

இங்கு அற்புதமாவது: மன்மதனால் தாம் அம்பிகையை மணந்ததாகப் பிறர் கருதுமாறு செய்வித்தமையன்றி "முதலுருப்பாதி மாதராவதுமுணரார்", "ஒன்றேடொன்று ஒவ்வா வேடம் ஒருவனே தரித்துக்கொண்டு நின்றலாலுலகு நீங்கி நின்றனன் என்றுமோரார்" என்ற சாத்திரக் கருத்து மாம். (சிவஞான சித்தியார் சுபக்கம் 49, 51). இது தருமபுர ஆதீனக் குறிப்புரையில் கண்டது.

பெரும்பகலே வந்தென் பெண்மை கொண்டு என்றது கள்வர் கவர்ந்து கொள்வது இரவுக் காலத்தில், அதுவும் அசையும் பொருள்களாயிருக்க இவர் கொண்டது பகல் நேரத்தில், அசையாப் பொருளாகிய பெண்மையை என்பது தோன்றக் குறிப்பிட்டதாகும்.

பேர்த்து — திரும்பவும். **அவர்**—இங்குச் சிவபிரானைக் குறித்தது.

இத்திருப்பாடலும் இப்பதிகத்தின் மற்றைய திருப் பாடல்களும் அகப்பொருள் துறையில் அமைந்தனவாம். "ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற கூட்டத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருள்" என்பது அகப்பொருள் இலக்கணத்துக்கு உரையெழுதிய நக்கீரர் தரும் அகப்பொருள் இலக்கணம்.

இறைவனோடு கலந்து உணரும் இன்பத்தை அகப் பொருள் இலக்கண அமைதிகட்கு ஏற்பப் பாடிய திருஞான சம்பந்தர் தாம் அருளிய முதல் திருப்பாடலிலேயே "உள்ளங் கவர் கள்வன்" எனப் பாடியருளினார்.

தன் உள்ளங்கவர்ந்த கள்வனாகிய தலைவனைத் தலைவி யானவள் நினைந்து நினைந்து உருகுகின்றாள். தன் நலங் கவர்ந்த அவனது இயல்புகளைத் தலைவி தன் தோழிக்குக் கூறுகின்றாள். தனது அவாவினைப் புலப்படுத்துமாறு வண்டு, குருகு, அன்னம், கிளி, கோழி நாரை போன்ற பறவைகளைத் தூது அனுப்புகின்றாள். தலைவனிடம் தன் மனதைப் பறி கொடுத்த அத்தலைவி இங்ஙனம் தூது விடுத் தும், தனது ஆற்றாமையைத் தன் தோழிகளிடமும் கூறி, அதனை ஒருவாறு நீக்கிக் கொள்ள முயலுகிறாள். இத்தகைய தலைவியினிடம் தோழியானவள் நலங்கவர்ந்தான் இருக்கும் இடம் வினவ, அவளுக்கு அவனது இருப்பிடத்தைக் கூறும் தலைவியின் கூற்றாக அமைந்தது இத்திருப்பதிகப் பாடல்கள். இம்மாதிரி அகப்பொருள் துறையில் அமைந்த பாடல்களில் பாடுபவர் தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாக வும் கொண்டு பாடுவது மரபு.

செம்மைத் தோணிபுரம்—சிறிது புண்ணியம் செய்யினும் பெரிய பயனைத் தந்திடும் செம்மை நலம் வாய்ந்த தோணி புரம் என்பதாம்.

கொங்கியல் பூங்குழல் கொவ்வைச் செவ்வாய்க்
கோமள மாதுமையாள்
பங்கியலுந் திரு மேனி யெங்கும்
பால்வெள்ளை நீறணிந்து
சங்கியல் வெள்வளை சோர வந்தென்
சாயல்கொண் டார்தமதூர்
துங்கியன் மாளிகை சூழ்ந்த செம்மைத்
தோணி புரந்தானே. 2

2. மணம் பொருந்திய பூக்களைச் சூடிய கூந்தலையும், கொவ்வைக் கனி போன்ற சிவந்த வாயினையுமுடைய மென்மைத் தன்மை பொருந்திய உமாதேவியார் ஒரு பாக மாகப் பொருந்திய திருமேனி முழுவதும் பால் போன்ற வெண்மையான திருநீற்றைப் பூசிக் கொண்டு, சங்கினால்

இயன்ற வெண்மையான வளைகள் கைகளினின்றும் நழுவி விழும்படி வந்து எனது தோற்றப் பொலிவினைக் கவர்ந்து கொண்டவராகிய சிவபிரானுரது ஊர், உயர்ச்சி பொருந்திய மாளிகைகள் சூழ்ந்த சிறப்பு மிக்க திருத்தோணிபுரம் ஆகும்.

கொங்கியல் பூங்குழல் — கொங்கியல் என்பதற்கு இயற்கை மணம் பொருந்திய எனப் பொருள் கொண்டால் பூங்குழல் என்பதற்கு அழகுடைய அல்லது பொலிவுடைய கூந்தல் என்று பொருள் கொள்க. அம்பிகையின் கூந்தலுக்கு இயற்கையாகவே மணம் உண்டு.

வெள்வளை சோர — தலைவன் மாட்டு ஏற்பட்ட காதல் மிகுதியால் உடலிளைத்து வளையல்கள் சோர்ந்தன என்பதாம்.

சாயல் கொண்டார் — விரகதாபத்தால் உடலிளைத்தும் மேனி பசப்பு நிறமும் ஆவதால் தோற்றப் பொலிவு கெடுகிறது. இதற்குக் காரணம் தலைவரேயாகையால் சாயல் கொண்டார் என்று தலைவர் மீது ஏற்றிச் சொல்லப்பட்டது.

துங்கு — உயர்வு என்ற பொருள் தரும் துங்கம் என்ற சொல் கடைக்குறைந்து துங்கு என்ருயிற்று.

மத்தக் களிற்றுரி போர்க்கக் கண்டு
மாதுமை பேதுறலுஞ்
சித்தந் தெளியநின் ருடி யேறூர்
தீவண்ணர் சில்பலிக்கென்(று)
ஒத்தபடி வந்தென் னுள்ளங் கொண்ட
ஒருவர்க் கிடம்போலும்
துத்தால் வின்னிசை வண்டு பாடுந்
தோணி புரந்தானே. 3—7

3-7. களிப்பு அல்லது செருக்கு மிக்க யானையின் உரித்த தோலைத் திருமேனி மீது போர்த்ததைக் கண்டு உமாதேவியார் அச்சத்தையடைதலும் அவரது மனம் (பயம்) தெளிய

நின்று ஆடல் செய்தவரும், எருதினை வாகனமாகக் கொண்டு செல்லுபவரும், தீயின் வண்ணமுடையவரும், (சிவபிரான்) சில்பலிக்சென்று அதற்கு ஒத்த கோலத்தில் வந்து எனது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஒப்பற்ற வருமாகிய பெருமானது இடம் துத்தம் என்னும் நல்ல இனிய இசையினை வண்டுகள் பாடுகின்ற திருத்தோணிபுரமே யாகும்.

மத்தம் — மயக்கம் என்றும் பொருள்படும். இது மதத்தால் ஏற்படுவது என்க.

உமை பேதுறலும் — இறைவனார் யானையின் தோலை உரித்த போது உமையம்மையாரும் அஞ்சினர் எனத் திருஞானசம்பந்தரே சில பாடல்களில் கூறியருளியுள்ளார். வந்துழிக் கண்டு கொள்க.

சில்பலி — பிச்சையிடுவோர் சிறிது அளவே இடுவராதலின் சில்பலி எனப்பட்டது. பலி — பிச்சை

ஒத்தபடி வந்து — பிச்சைக்கு வருவோர் எங்ஙனம் வருதல் வேண்டுமோ அங்ஙனம் வந்து.

ஒருவர் — தனக்கு ஒப்பாரும் மிக்காரும் அற்ற ஒருவர் என்பதாம்.

துத்தம் — ஏழு சுரங்களுள் ஒன்று. இந்த சுரத்தில் வண்டுகள் பாடுவதாகக் கொள்க. அல்லது உபலட்சணத்தால் ஏழிசைகளிலுமே வண்டுகள் பாடுகின்றன எனக் கொள்ளினும் இழுக்காகாது.

வள்ளல் இருந்த மலையதனை வலஞ்
செய்தல் வாய்மையென
உள்ளங் கொள்ளாது கொதித்தெழுந்தன்(று)
எடுத்தோன் உரம்நெரிய

மெள்ள விரல்வைத்தென் உள்ளங் கொண்டார்
　　மேவு மிடம்போலும்
துள்ளொலி வெள்ளத் தின்மேல் மிதந்த
　　தோணி புரந்தானே. 8

8. வேண்டுவார் வேண்டுவதே வரையாது ஈயும் வள்ளற்பெருமானுர் வீற்றிருந்த மலையாகையால் அதனை வலஞ் செய்து செல்லலே உண்மை நெறி என்பதை உள்ளத்தில் கொள்ளாது சினத்துடன் எழுந்து அன்று திருக்கயிலாய மலையினைப் பெயர்த்து எடுத்தலைச் செய்ய முயன்றவனுகிய இராவணனது மார்பு நெரியும்படி மெள்ள விரலை வைத்து ஊன்றி (அந்த வீரத்தால்) என்னுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பெருமானுர் விரும்பி எழுந்தருளியுள்ள இடம், துள்ளுகின்ற ஒலியுடன் கூடிய வெள்ளத்தின் மேல் மிதந்த திருத்தோணிபுரமேயாகும்.

வள்ளல் - இப்பெயர் சிவபிரான் ஒருவருக்கே முற்றிலும் பொருந்தும். மற்றையோரை வள்ளல் எனக் கூறுவது உபசாரவழக்கேயாம் எனக் கொள்க.

இராவணனது மார்பு நெரியச் செய்தது இறைவனுர்க்கு மிக எளிய செயல் என்பது காட்ட மெள்ள விரல் வைத்து எனக்கூறினுர்.

துள்ளொலி — அலைகள் துள்ளி வீசுதலால் உண்டாகிய ஓசை.

வெள்ளத்தின் மேல் மிதந்த தோணிபுரம் — பிரளய காலத்தில் இத்தலம் அழிந்து போகாது நின்றதன் குறிப்பு.

வெல்பற வைக்கொடி மாலும் மற்றை
　　விரைமலர் மேலயனும்
பல்பற வைப்படி யாயுயர்ந்தும் பன்றிய
　　தாய்ப்ப ணிந்தும்

செல்வற நீண்டெஞ் சிந்தை கொண்ட
செல்வ ரிடம்போலும்
தொல்பற வைசுமந் தோங்கு செம்மைத்
தோணி புரந்தானே. 9

9. கருடக்கொடியையுடைய திருமாலும், மணம் மிக்க மலர் மேலுறைகின்ற பிரமதேவனும் முறையே பன்றியின் வடிவெடுத்துக் கீழே சென்றும், பலபறவைகள் ஒருருவு கொண்டு பறந்தாற்போல உயரப்பறந்து சென்று தேடியும் அவர்களால் சென்று அடையாத வண்ணம் நீண்டு, எனது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட செல்வராகிய சிவபெருமானது இடம் தொன்மையான பறவைகள் சுமந்து ஓங்கியுள்ளதான சிறப்புமிக்க திருத்தோணி புரமேயாகும்.

வெல்பறவை — வெல்லுதலையுடைய பறவை, இங்குக் கருடனைக் குறித்தது.

மாலும் அயனும் உயர்ந்தும் பணிந்தும் என்று உள்ளதை மாலும் அயனும் பணிந்தும் உயர்ந்தும் என மாற்றிப் பொருள் கொள்க. இது எதிர் நிரல் நிறைப் பொருளில் வந்தது.

செல்வற — செல்வு + அற. செல்வு — செல்லுதல்

தொல்பறவை சுமந்தோங்கு தோணிபுரம்—ஊழிப் பெரு வெள்ளத்தில் இறைவன் இறைவியாரோடு பிரணவம் என்னும் தோணியில் வீற்றிருத்தலால் இத்தலம் அழியாதிருப்பதென்றும், அத்திருத்தோணியைச் சுற்றிக் கொண்டு பறவைகளின் உருக்கொண்டு தேவர்கள் அதனைத் தாங்குபவர்களாய் இருப்பர் என்றும் தலவரலாறு கேட்கப்படும். இத்தலத்தில் தோணியப்பர் எழுந்தருளியிருக்கும் திருமாளிகை ஒரு தோணிவடிவாயமைந்து அதைச் சுற்றிலும் பறவைகள் தாங்கியிருக்கும் தன்மையாகிய அமைப்புக்களும் இன்றும் காண உள்ளன. (திரு சி. கே. சுப்பிரமணிய முதலியார் பெரியபுராணம்—திருநாவுக்கரசு நாயனார் புராணம் பேருரை—பக்கம் 274)

"தொல்பறவை சுமந்தோங்கும் தோணிபுரம்" என்ற கருத்தை விளக்கும் திருநாவுக்கரசு சுவாமிகளின் அருமைத் திருப்பாடல் கீழே காண்க.

திருச்சிற்றம்பலம்

பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட
ஞான்று நின் பாதமெல்லாம்
நாலந்து புள்ளின மேந்தின
என்பர் நளிர் மதியம்
கால்கொண்ட வண்கைச் சடைவிரித்(து)
ஆடுங் கழுமலவர்க்(கு)
ஆளன்றி மற்றுமுண் டோவந்தண்
ஆழி அகலிடமே.

திருச்சிற்றம்பலம்

(திருநாவுக்கரசர் தேவாரம்—4-ம் திருமுறை
790வது திருப்பாடல்)

குண்டிகை பீலிதட் டோடு நின்ற
கோசரங் கொள்ளியரும்
மண்டைகை யேந்தி மனங்கொள் கஞ்சி
ஊணரும் வாய்மடிய
இண்டை புனைந்தெரு தேறிவந் தென்னெழில்
கவர்ந்தா ரிடமாம்
தொண்டிசை பாடல் அறாத தொன்மைத்
தோணி புரந்தானே. 10

10. கமண்டலம், மயில்தோகை, தடுக்கு ஆகியவற்றுடன் மலைகளில் வசித்தலையுடைய சமணர்களும், சட்டி வடிவத்தில் அமைந்த மண்டையென்னும் பாத்திரத்தில் விருப்பமான கஞ்சி உணவைக் கொள்பவர்களாகிய பௌத்தர்களும் பேசுகின்ற வார்த்தைகள் அடங்க, இண்டைமாலை புனைந்து எருதின் மீது ஏறிவந்து எனது அழகினைக் கவர்ந்தவராகிய சிவபிரானரது இடம், தொண்டர்களது இசைப்

பாடல்கள் நீங்காத பழைமையான பதியாகிய திருத்தோணி புரமேயாகும்.

குண்டிகை — நீர்ப்பாத்திரம். கமண்டலம் என்றும் கூறுவர். நினைத்த இடத்தில் நீர் பருகுவதற்கு உபயோகப் படும்.

பீலி—மயில் தோகை, நடக்கும் போது வழியில் சிறு உயிர்க்குங்கூடத் தீங்கு நேராதவாறு பீலியால் வழியை ஒதுக்கிக்கொண்டு செல்வது சமணர்கள் வழக்கம்.

தட்டு—தடுக்கு, உட்காருவதற்கு உபயோகப்படும்.

கோசரங்கொள்ளியர் — கோ – நீர், சரம்—அதில் வாழ் தலையுடைய மீன்கள் எனக் கொண்டு அதனைக் கொள்பவர் சமணர் என்ற பொருள்படுமாறு திருத்தருமையாதீனக் குறிப்புரையமைந்திருந்தது. சமணர்கள் ஊன் உணவு அல்லது மீன் உணவு எதுவுமே கொள்ளார். உயிரைக் கொல்வதும் பாவம், பிறர் கொன்றதைக் கொள்ளுவதும் பாவம் என்ற கொள்கையுடையவர்கள். எனவே அவர்களை மீனுணவு கொள்பவர்கள் என்று பொருள் கூறியது பொருத்தமன்று. வேறு எவ்வாறு இருக்கலாம் என ஆராய்ந்த போது இராணிப்பேட்டை புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனார் அவர்கள் கோ—மலை, சரம்—அதில் சரித்தல். கொள்ளியர்—சரித்தலாகிய வாழ்க்கையைக் கொண்டவர்கள். எனவே மலைகளில் வசித்தலையுடைய வர்கள் என்று பொருள் கூறுவது பொருத்தமெனவும் அதற்கு எடுத்துக்காட்டாக சமணகுருமார்கள் ஆனைமலை முதலிய மலைகளில் வசித்தார்கள் என்பதைத் திருஞான சம்பந்த மூர்த்திகளே "ஆனைமாமலை ஆதியாய இடங்களில் பல அல்லல்சேர் ஈனர்கட்கெளியேனலேன்..." ('மானினேர் விழி' எனத்தொடங்கும் திருவாலவாய்ப்பதிக முதற்பாடல்) என்று அருளிச் செய்திருப்பதைச் சுட்டிக் காட்டி எழுதி யுள்ளார்கள். எனவே அப்பொருளையே கொண்டோம்.

மண்டை — ஒரு வகை உண்கலம். சட்டி வடிவத்தில் அமைக்கப்படும் உண்கலத்துக்கு மண்டை என்பது சங்க இலக்கியத்தில் பயின்றுவருஞ் சொல்லாகும் என்றும், அஃது அவரவர் தகுதிக்கேற்ப உயர்ந்த பொருளாலுஞ் செய்யப் படும் என்றும் எடுத்துக்காட்டாக "மணிசெய் மண்டைத் தீம்பாலேந்தி — ஈனுத் தாயார் மடுப்பவுமுண்ணுள்" என்பது அகநானூறு என்றும் தூத்துக்குடி சித்தாந்த போதகாசிரியர் திரு. த. சி. ச. இராமச்சங்கு பாண்டியன் அவர்கள் குறிப் பிட்டுள்ளார்கள். அவர்கட்கு எமது மனப்பூர்வமான நன்றி. இத்தகைய கருத்துக்களைப் பெரிதும் வரவேற்கின்ருேம்.

மனங்கொள் கஞ்சி ஊணர் — மனதுக்குப் பிடித்தமான கஞ்சியை உணவாகக் கொள்ளும் பௌத்த குருமார்கள்.

வாய் மடிய — வாய் இங்கு வாயினுல் பேசப்படும் பேச்சுக்களைக் குறித்தது. எனவே பேச்சு அடங்க என்று பொருள் கொள்ளலாயிற்று.

இண்டை—ஒரு வகை மாலை விசேடம் 'திங்கள் வட்டம் போலத் திரட்சியுற்ற பத்திர புட்பங்கலந்த மாலை வகை. சிவலிங்கத்துக்கு இம்மாலை இன்றியமையாதது'. இப்பொருள் விசேடம் திருத்தருமபுர உரைக்குறிப்பில் காணப்படுகிறது.

தொண்டு — தொண்டர்கள்.

தூமரு மாளிகை மாடம் நீடு
தோணி புரத்திறையை
மாமறை நான்கினொடங்க மாறும்
வல்லவன் வாய்மையினுல்
நாமரு கேள்வி நலந்திகழும் ஞான
சம்பந் தன்சொன்ன
பாமரு பாடல்கள் பத்தும் வல்லார்
பார்முழு தாள்பவரே. 11

திருச்சிற்றம்பலம்

11. தூய்மை மிக்க மாளிகைகள், மாடங்கள் நிறைந்த திருத்தோணிபுரத்துக் கோயில்கொண்ட சிவபிரானாகிய இறைவனை, பெருமையுடைய நான்கு வேதங்களோடு ஆறு அங்கங்களும் வல்லவனும், நாவினில் பொருந்திய உண்மையான உபதேச மொழிகளால், கேள்வி ஞானத்தைப் புகட்டும் நன்மை திகழப்பெறுபவனுமாகிய திருஞானசம்பந்தன் சொல்லிய பாட்டினிலக்கணங்கள் பொருந்திய இப்பாடல்கள் பத்தும் பாடவல்லவர்கள் இந்நிலவுலகம் முழுவதையும் ஆள்பவர் ஆவார்கள்.

நான்மறை ஆறங்கங்கள்—இவற்றின் விவரங்களை முன் 7-ம் தமிழ்மாலையில் *62—63*-வது பக்கங்களில் கொடுத்து உள்ளோம்.

வாய்மையினல் நாமரு என்பதை நாமரு வாய்மையினல் என மாற்றி 'நாவிலே பொருந்திய வாய்மை' எனப் பொருள் கொள்ளப்பட்டது.

கேள்வி — உபதேச மொழிகள் பிறரால் கேட்கப் பட்டே கொள்ளப்படுதலின் கேள்வி என்று அருளிச் செய்தனர் என்று கொள்க.

குறிப்பு: இத்திருப்பதிகத்தின் 4, 5, 6, 7, வது திருப் பாடல்கள் சிதைந்து போயின.

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்

திருச்சிரபுரம்—1

(சீகாழி)

பதிகவரலாறு : சீகாழிக்குரிய வரலாறு தெரியாத திருப்பதிகங்களில் **திருச்சிரபுரம்** என்ற திருப்பெயரில் பாடியருளியவை இதுவும் இதனையடுத்து வரும் இரண்டு திருப்பதிகங்களுமாம்..

தேவருடன் வேற்று உருவில் (பாம்பின் உருவில்) அமுதுண்ண வந்தபோது அடியுண்ட சிலம்பன் என்ற ஒரு அரக்கனின் தலை ராகுவாக நின்று பூசித்தமையால் சிரபுரம் என்னும் பெயர் பெற்றது. அவனுடல் கேது என்ற பெயருடன் வழங்கலாயிற்று. இவையிரண்டும் சேர்ந்து கிரஹங்கள் ஒன்பதாகி நவக்கிரஹங்கள் என வழங்கப்பட்டன.

பண்: பழந்தக்கராகம்] திருச்சிற்றம்பலம் [1-ம் **திருமுறை**

பல்லடைந்த வெண்டலையிற் பலிகொள்வ தன்றியும்போய்
வில்லடைந்த புருவநல்லாள் மேனியில் வைத்தலென்னே
சொல்லடைந்த தொன்மறையோ டங்கங் கலைகளெல்லாஞ்
செல்லடைந்த செல்வர்வாழுஞ் சிரபுர மேயவனே. 1

பதிகப்பொழிப்புரை ; *1.* இறைவனைப் பற்றிய புகழ் நிறைந்த தொன்மையான வேதங்களோடு வேதாங்கங்கள், மற்றும் கலைகள் எல்லாவற்றிலும் மனம் செல்லுதலையுடைய கலைச்செல்வர்கள் வாழுகின்ற **திருச்சிரபுரம்** என்ற திருத்தலத்தில் விரும்பி எழுந்தருளியிருக்கும் பெருமானே! பற்கள் நிறைந்ததான வெண்தலையில் பிச்சை கொள்வதேயன்றி, வில்லையொத்த புருவம் உடைய உமாதேவியாரை உமது திருமேனியில் ஒரு பாகத்தே வைத்தது என்னே? (கூறியருளுக என்றபடி)

சொல்—இங்குப் 'புகழ்' என்ற பொருளில் வந்ததாகக் கொள்க.

செல் அடைந்த — செல்லுதலை அடைந்த. இங்குச் செல்லுதல் வேதம், ஆகமம், கலைகள் இவற்றைக் கற்றலின் மீது மனஞ்செல்லுதலைக் குறித்தது.

இத்திருப்பாடலில் பின்னிரண்டடிகளில் இறைவனை விளித்ததும், முன்னிரண்டு அடிகளில் வினவை அமைத்ததும் கண்டு கொள்க. பின் வரும் பாடல்களிலும் இவ்வாறே விளியும் வினவும் அமைந்துள்ளன.

கொல்லைமுல்லை நகையினளோர் கூறது வன்றியும்போய்
அல்லல்வாழ்க்கைப் பலிகொண்டுண்ணு மாதர வென்னை-
கொலாஞ்
சொல்லநீண்ட பெருமையாளர் தொல்கலை கற்றுவல்லார்
செல்லநீண்ட செல்வமல்கு சிரபுர மேயவனே. 2

2. சொல்லுதற்கு அரியதாய் நீண்ட பெருமையுடைய வர்களும், பழைமையான கலைகளைக் கற்று அவற்றில் வல்ல வர்களும் சென்று சேர்தலையுடையதால் பெரிய செல்வம் மிகுந்த திருச்சிரபுரத்தைக் கோயிலாக விரும்பி எழுந்தருளிய சிவபிரானே! முல்லை நிலத்து முல்லை அரும்புகளை ஒத்த பற்களையுடைய உமாதேவியார் ஒரு பாகமாக உடையது அன்றியும் இல்லங்கள் தோறும் போய்த் துன்பந்தருவதாகிய வாழ்க்கையாகிய பிச்சை எடுத்துண்ணுதலை மேற்கொள்ளும் கருத்து என்னையோ? (கூறியருள்வீராக என்றபடி)

முன் திருப்பாடலில் பலி கொள்வதன்றியும் பெண்ணைப் பாகங்கொண்டதென்னே என்று வினவிய பிள்ளையார் இத் திருப்பாடலில் பெண்ணைப் பாகங்கொண்ட நீர் பலி கொண்டு உண்ணும் ஆதரவு என்னையோ? என மாற்றிக் கேட்கும் நயம் காண்க.

கொல்லை—முல்லை நிலம் (காடும் காடு சார்ந்த இடமும்)

முல்லை—முல்லை என்ற மலர்க்கொடியின் அரும்புகளைக் குறித்தது.

நீரடைந்த சடையின்மேலோர் நிகழ்மதி யன்றியும்போய்
ஊரடைந்த ஏறதேறி உண்பலி கொள்வதென்னே
காரடைந்த சோலைசூழ்ந்து காமரம் வண்டிசைப்பச்
சீரடைந்த செல்வமோங்கு சிரபுர மேயவனே. 3

3. மேகத்தினளவு உயர்ந்த சோலைகள் சூழ்ந்து அவற்றில் வண்டுகள் இசை பாடப் புகழ் பெற்ற செல்வம் ஓங்குகின்ற திருச்சிரபுரம் மேவிய பெருமானே! கங்கைநதி தங்கிய சடையின் மேல் விளங்குகின்ற ஒரு பிறைச்சந்திரனைச் சூடிய தன்றியும், நீர் போய் ஊர் தோறும் சென்றடைதலையுடைய எருதின் மீது ஏறி உண்ணுதற்குரிய பிச்சையினைக் கொள்வதென்னையோ? (கூறியருள்க என்றி வினவியமை கொள்க)

கார்—மேகம். இச்சொல்லுக்குரிய பல பொருள்களில் இருள் என்பதும் ஒன்றும். இங்கு இப்பொருள் கொண்டால் இருள் அடைந்த சோலை எனக் கொள்க. சோலைகள் மரம், செடி, கொடிகளின் நெருக்கத்தால் இருண்டிருக்கும் அல்லவா?

காமரம் — இசை; சீர்—புகழ்

கையடைந்த மானினோடு காரர வன்றியும்போய்
மெய்யடைந்த வேட்கையோடு மெல்லியல் வைத்தலென்னே
கையடைந்த களைகளாகச் செங்கழு நீர்மலர்கள்
செய்யடைந்த வயல்கள்சூழ்ந்த சிரபுர மேயவனே. 4

4. செங்கழுநீர் மலர்களே பக்கங்களை அடைந்த களைகளாகக் கொண்ட நேர்த்தி அமைந்த வயல்கள் சூழ்ந்த திருச்சிரபுரம் கோயிலாக மேவிய பெருமானே! உமது திருக்கரத்தினிலே சேர்ந்துள்ள மானுடன் கரும்பாம்பினையும் வைத்திருப்பதன்றியும், நீர் மெல்லியலாகிய உமாதேவியாரையும் மிகுந்த விருப்பத்துடன் வைத்திருப்பது என்ன காரணம் பற்றியோ? (கூறியருள்வீராக)

மெல்லியல்—பெண் என்ற பொதுப் பொருள் தரும் இச் சொல் இங்கு உமையம்மையாரைக் குறித்தது.

வயல் பக்கங்களில் புல்பூண்டுகளே களைகளாக வளர்வது இயல்பாயிருக்க, இங்கு செங்கழுநீர்ப்பூக்களே களைகளாக வளர்ந்துள்ளமையால் செய்யடைந்த வயல்கள் எனக் கூறி யருளினர் போலும்.

செய் என்பதற்கு விளை நிலம் எனப்பொருள் கொண்டு திருச்சிரபுரத்து வயல்கள் அனைத்துமே விளைநிலங்களே தவிர தரிசாகப் பயனற்றது ஏதுமில்லை என்பது போதர செய் யடைந்த வயல்கள் என அருளிச் செய்தனர் எனக் கொள்ளி னும் இழுக்காகாது. இதன் உள்ளுறைப் பொருளாகச் சிர புரத்து மக்களின் உள்ளமெல்லாம் சிவபக்திப் பயிர் விளையும் விளை நிலங்களேயன்றிப் பாழ்பட்டவையல்ல என்ற கருத்தை யும் கூடக் குறிப்பிட்டருளினரோ என்ற எண்ணமும் ஏற்படுகிறது.

புரமெரித்த பெற்றியோடும் போர்மத யானைதன்னைக்
கரமெடுத்துத் தோலுரித்த காரண மாவதென்னே
மரமுரித்த தோலுடுத்த மாதவர் தேவரோடுஞ்
சிரமெடுத்த கைகள்கூப்புஞ் சிரபுர மேயவனே. 5

5. மரங்களினின்றும் உரித்தெடுத்த பட்டைகளை (மரஉரி) உடுத்திய பெருந்தவஞ் செய்கின்ற முனிவர்களும் தேவர்களும் தலையின்மீது கைகளை வைத்துக் கூப்பி வணங்கும் திருச்சிரபுரம் மேயபெருமானே, முப்புரங்களை எரித்தருளிய தன்மையோடு போர் செய்தலில் வல்லதான மதயானையினைக் கைகளால் தூக்கியெடுத்து அதன் தோலை உரித்த காரணம் என்னையோ?

பெற்றி — தன்மை, இங்கு 'சிறப்பு' என்னும் பொருளைத் தரும்,

மரமுரித்த தோல் — மர உரி. காடுகளில் தவஞ்செய்யும் முனிவர்கள் மரங்களினின்றும் உரித்த பட்டைகளைப் பதஞ் செய்து அவற்றையே உடையாகக் கொள்வர்.

கண்ணுமூன்று முடையதன்றிக் கையினில் வெண்மழுவும்
பண்ணுமூன்று வீணையோடு பாம்புடன் வைத்தலென்னே
எண்ணுமூன்று கனலுமோம்பி எழுமையும் விழுமியராய்
திண்ணமூன்று வேள்வியாளர் சிரபுர மேயவனே. 6

6. எண்ணப்படுகின்ற மூன்று வகையான எரியினை ஓம்பி, எழு பிறப்பிலும் மேலானவராய் உறுதியாக மூன்று வகையாக அமைந்த வேதவேள்விகளைச் செய்யும் மறையவர் கள் வாழுகின்ற திருச்சிரபுரம் மேவிய பெருமானே! தேவரீர் மூன்று கண்களையுடையவராயிருப்பதன்றியும் கையினில் வெண்மழுவும், மூவகையான பண்களுடன் கூடிய வீணை யுடன் பாம்பினையும் வைத்திருத்தல் எக்காரணம்பற்றியோ? (கூறியருள்வீராக என்றபடி)

மூன்று கனல்—ஆஹவனீயம், தட்சிணாக்கினி, காருகபத் தியம். இவை முறையே சதுரவடிவாகவும், முக்கோண வடிவாகவும், வில்லின் வடிவமாகவும் அமைக்கப்படும். இவை பற்றி முன்னர் வந்துள்ள இடங்களில் கூறியவை களையும் நினைவு கூர்க.

மூன்று வேள்வி—மூன்று வகையான வேத வேள்விகள். இவை ஸோம யக்ஞம், ஹவிர் யக்ஞம், பாகயக்ஞம் எனப் படும். இவை ஒவ்வொன்றும் ஏழுவகையாகப் பிரிந்து மொத்தம் 21 வேள்விகள் வேதங்களில் விதிக்கப்பட்டன வாம். இவற்றைத் தொகையாக மூன்று வேள்வி எனக் கூறியருளினர் எனக் கொள்க.

இவ்வாறின்றித் திருத்தருமபுரம் பதிப்பு குறிப்புரை ஆசிரியர் மூன்று வேள்வியாளர் என்பதற்கு தேவயக்ஞம், பிதிர்யக்ஞம், ருஷியக்ஞம் என்ற மூன்று வேள்விகளையும்

செய்பவர்கள் எனக் கூறியுள்ளார். இம்மூன்றும் பஞ்சமஹா யக்ஞம் என்ற ஐம்பெரும் வேள்விகளைச் சேர்ந்தவை. அவற்றினின்றும் இம் மூன்றை மட்டும் பிரித்து திண்ணம் இவைகளைச் செய்பவர் எனக் கூறினால் மற்ற இரண்டு வேள்விகளைச் (மனுஷ்ய யக்ஞம், பூதயக்ஞம்) செய்யாது விடுபவர் என்றல்லவோ கூறியதாகும்? அக்காலத்து அந்தணர்கள் ஐம்பெரும் வேள்விகளையும் நித்தம் தவறாது செய்தலைக் கடமையாகக் கொண்டவர்கள். எனவே தருமபுரக் குறிப்புரை பொருத்தமாகத் தோன்றவில்லை.

நாம் முற்கூறியபடி மூன்று வகையான வேள்விகள் மொத்தம் இருபத்திஒன்றனையும் வேத விதிப்படி செய்து முடித்த பிராமணர் பலர் நந்தமிழ்நாட்டில் இருந்தனர். உதாரணமாகச் சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் என்பான் சிவபெருமான் அருளிய வேதநெறியில் ஒழுகிச் சிறந்த மூவேழ் (21) வேள்விகளைச் செய்து முடித்தான் என்னும் செய்தி புறநானூறு—166-வது பாடலால் அறியப்படுகின்றது. (திணை — வாகை; துறை—பார்ப்பனவாகை, பாடியவர் ஆவூர் மூலங்கிழார்)

குறிப்பு:— ஐம்பெருவேள்விகள் தினமும் செய்யப்படுவன. மூவகையான 21 வேள்விகள் குறிப்பிட்ட காலங்களில் செய்யப்படுவன.

குறைபடாத வேட்கையோடு கோல்வளை யாளொருபால்
பொறைபடாத இன்பமோடு புணர்தரு மெய்ம்மையென்னே
இறைபடாத மென்முலையார் மாளிகை மேலிருந்து
சிறைபடாத பாடலோங்கு சிரபுர மேயவனே. 7

7. சிறிதும் தளராத மென்மையான நகில்களையுடைய மகளிர் மாளிகைகளின் மேலிருந்து பாடுகின்ற குற்றமற்ற பாடல்கள் ஓங்குகின்ற **திருச்சிரபுரம்** மேவிய பெருமானே! தேவரீரைக் குறையாத காதலோடும் பொறுக்கலாற்றாத இன்பத்துடனும் திரண்ட வளையல்களை அணிந்த உமா

தேவியார் ஒருபக்கத்தில் கலந்து நிற்பதன் உண்மைதான் யாதோ? (கூறியருள்வீராக என்றபடி)

இறைபடாத மென்முலையார் — இத்தொடர் பாடுகின்ற பெண்களின் இளமை நலத்தைக் குறித்ததாகும்.

கோல்வளை -திரண்டவளையல்கள்; **கோல்** — திரட்சி

குறைபடாத வேட்கை — வேட்கை என்பது பொருளை யடையாத காலத்து அதன்கண் நிகழும் பற்றுள்ளம் ஆதலின், அடைந்தவழி, நுகர்ந்தவழிக் குறையுமன்றே. அங்ஙனம் குறையாமல் என்பது வலியுறுக்கக் **குறைபடாத வேட்கை** என்றார். (திருத்தருமையாதீனக் குறிப்புறை)

மலையெடுத்த வாளரக்கன் அஞ்ச ஒருவிரலால்
நிலையெடுத்த கொள்கையானே நின்மல னேநினைவார்
துலையெடுத்த சொற்பயில்வார் மேதகு வீதிதோறுஞ்
சிலையெடுத்த தோளினனே சிரபுர மேயவனே. 8

8. திருக்கயிலாய மலையைப் பெயர்க்க முயன்ற வாளை யுடைய அரக்கனாகிய இராவணன் அஞ்சும்படி ஒரு விரலால் அழுத்தி இறைத்தன்மையின் நிலையை எடுத்துக் காட்டிய கொள்கையானே! நின்மலனே! மேருமலையை வில்லாக எடுத்துத் தாங்கிய தோளையுடையவனே! வீதிகள் தோறும் உன்னை நினைப்பவர்களும், துலைத்தட்டு போல இருவினை யொப்பொடு கூடித் தோத்திரிக்கும் அடியவர்களும் வாழு கின்ற மேன்மைபொருந்திய **திருச்சிரபுரம் மேயவனே!** (உன்னை வணங்குகின்றோம்). இத்திருப்பாடலில் வினா ஏது மின்றி இறைவனைத் தோத்திரித்தல் மட்டுமே உள்ளது.

நினைவார் — தியானிப்பவர்கள்.

சொற்பயில்வார் — பொருள் சேர் புகழ் நிறைந்த சொற் களால் தோத்திரம் செய்பவர்கள்.

மேதகு என்பதைச் சிரபுரத்துடன் கூட்டி **மேதகு சிரபுரம் மேயவனே** எனப் பொருள் கொள்க.

மாலினோடு மலரினானும் வந்தவர் காணாது
சாலுமஞ்சப் பண்ணிநீண்ட தத்துவ மேயதென்னே
நாலுவேதம் ஓதலார்கள் நம்துணை என்றிறைஞ்சச்
சேலுமேயுங் கழனிசூழ்ந்த சிரபுர மேயவனே. 9

9. திருமாலோடு, தாமரை மலர்மேல் உறையும் பிரம தேவனும் (காண்போம் என்று) வந்த அவர்கள் காணா வண்ணம் மிகவும் அஞ்சும்படிச் செய்து பேரழலாய் நீண்ட தன் தத்துவம் தான் யாதோ? நான்கு வேதங்களையும் ஓதுதலையுடைய அந்தணர்கள் நீரே எமது துணை என்று இறைஞ்சும்படியாகச் சேல் மீன்கள் மேய்கின்ற கழனிகள் சூழ்ந்த, திருச்சிரபுரம் மேய பெருமானே! (கூறியருள்வீராக என்றபடி)

நாலுவேத மோதலார்கள் நம்துணை என்றிறைஞ்சச் சிரபுரம் மேயவனே என்றும், சேலுமேயும் கழனி சூழ்ந்த சிரபுரம் மேயவனே என்றும் ஈரிடத்தும் கூட்டிப் பொருள் கொள்க.

புத்தரோடு சமணர்சொற்கள் புறனுரை என்றிருக்கும்
பத்தர்வந்து பணியவைத்த பான்மைய தென்னைகொலாம்
மத்தயானை உரியும்போர்த்து மங்கையொ டும்முடனே
சித்தர்வந்து பணியுஞ்செல்வச் சிரபுர மேயவனே. 10

10. புத்தர்கள், சமணர்களாகிய புறச்சமயிகள் கூறுகின்ற வார்த்தைகள் உண்மைநெறிக்குப் புறம்பானவை என்று உறுதியாக இருக்கும் பத்தர்கள் வந்து உம்மைப் பணியும்படி வைத்த தன்மை என்னையோ? மயக்கம் மிகுந்த யானையின் தோலையும் போர்த்து மங்கையாகிய உமாதேவியாரோடு உடனாய், சித்தர்கள் வந்து பணியும்படிச் செல்வ மிக்க திருச்சிரபுரம் மேவிய பெருமானே! (கூறியருளும் என்றபடி)

புத்தர், சமணர்கள் வார்த்தைகளில் மயங்காது திடமான உறுதியுடன் தேவரீரையே வணங்கும்படியான நிலையில் வைத்தல் என்னே? என்று வியந்து வினவியதாம்.

புத்தரும் சமணரும் தமது பேச்சு வன்மையினால் அந்நாளில் சைவர்கள் மனத்தில் கலக்கமுண்டுபண்ணினர். எனவே இங்ஙனம் வினவியருளினர் போலும்.

சித்தர்கள்-யோகநெறியில் நின்று சித்தி பெற்றவர்கள், அட்டமாசித்தி பெற்றவர்கள்.

தெங்குநீண்ட சோலைசூழ்ந்த சிரபுர மேயவனை
அங்கநீண்ட மறைகள்வல்ல அணிகொள்சம் பந்தனுரை
பங்கநீங்கப் பாடவல்ல பத்தர்கள் பாரிதன்மேல்
சங்கமோடு நீடிவாழ்வர் தன்மையி னாலவரே. 11

திருச்சிற்றம்பலம்

11. நீண்டு உயர்ந்த தென்னைமரச் சோலைகள் சூழ்ந்த திருச்சிரபுரம் மேயபெருமானை, வேதாங்கங்கள் எனப்படும் ஆறு அங்கங்களால் நீண்ட மறைகள் வல்லவரான பெருமை கொண்ட திருஞானசம்பந்தனுடைய உரையாகிய தமிழ் மாலையினைத் தமது குற்றங்கள் நீங்கும்படிப் பாடுதல்வல்ல பக்தர்கள் இந்த நிலவுலகத்தின்மேல் நல்லாரிணக்கம் பெற்று அத்தன்மையினால் நீடி வாழ்வார்கள்.

பாடவல்ல அடியார்களே சங்கமோடு தன்மையினால் அவர் நீடிவாழ்வர் எனக் கூட்டிப் பொருள் கொள்க.

சிவம்

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருச்சிரபுரம்-2

(சீகாழி)

பண்: வியாழக்குறிஞ்சி] திருச்சிற்றம்பலம் [1-ம்திருமுறை

வாருறு வனமுலை மங்கைபங்கன்
நீருறு சடைமுடி நிமலனிடம்
காருறு கடிபொழில் சூழ்ந்தழகார்
சீருறு வளவயற் சிரபுரமே. 1

பதிகப்பொழிப்புரை: *1.* கச்சணிந்த அழகிய திருமுலையையுடைய மங்கையாம் உமாதேவியாரை ஒரு பங்கிலே கொண்டவனும், கங்கைநதி சூடிய சடைமுடியையுடைய நிமலனுமாகிய பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம், இருள் நிறைந்ததும், மணம் மிக்கதுமான பொழில்கள் சூழ்ந்து அதனால் அழகு பொருந்திய பெருமையுடையதும் சிறப்புமிக்க வளமையுடைய வயல்கள் நிறைந்ததுமான திருச்சிரபுரமாகும்.

வார் – கச்சு; நீர்—கங்கை; கார்—இங்கு இருள் எனக் கொள்ளப்பட்டது. மரம் செடிகளின் செறிவால் சோலைகள் இருண்டிருந்தன என்பதாம்.

அங்கமொ டருமறை அருள்புரிந்தான்
திங்களொ டரவணி திகழ்முடியன்
மங்கையொ டினிதுறை வளநகரஞ்
செங்கயல் மிளிர்வயற் சிரபுரமே. 2

2. ஆறு அங்கங்களோடு கூடிய நான்கு வேதங்களை அருளிச்செய்தவனும், பிறைச்சந்திரனோடு பாம்பாகிய அணிகலம் திகழ்கின்ற திருமுடியையுடையவனுமாகிய சிவபிரான் உமாதேவியாரோடு இனிது எழுந்தருளியுள்ள வளமுள்ள

நகரம் செம்மையான கயல்மீன்கள் மிளிர்கின்ற திருச்சிர புரமேயாகும்.

பரிந்தவன் பன்முடி அமரர்க்காகித்
திரிந்தவர் புரமவை தீயின்வேவ
வரிந்தவெஞ் சிலைபிடித் தடுசரத்தைத்
தெரிந்தவன் வளநகர் சிரபுரமே. 3

3. முடி சூடிய பல தேவர்கட்காக அன்பு கூர்ந்தவனாய் விண்ணிலே திரிதலையுடையவராயிருந்த முப்புரத்தாரது புரங்கள் தீயில் வேகும்படி நன்கு கட்டிய கொடுஞ் சிலையினைப் பிடித்து அதில் செலுத்துதற்குரிய கொல்லும் தன்மை யதான அம்பினைத் தெரிந்தெடுத்தவனாகிய சிவபிரானது வளநகர் திருச்சிரபுரமேயாகும்.

பரிந்தவன் - அன்புகூர்ந்தவன். இதனை முற்றெச்சமாக்கிப் பொருள் கொள்ளப்பட்டது.

அடுசரம் — கொல்லும் தன்மையுடைய அம்பு.

இறைவனார் முப்புரத்தைக் கண்விழியால் எரித்தார் என்றும் சிரித்துப்புரம் எரித்தார் என்றும் சொல்வதே மரபு. அம்பினால் எரித்தார் என்பது உபசார வழக்கு.

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற

(திருவாசகம் : திருஉந்தியார் — 2)

என்ற திருவாசகப் பாடலும் இங்கு கருதற்குரியது.

நீறணி மேனியன் நீள்மதியோ(டு)
ஆறணி சடையினன் அணியிழையோர்
கூறணிந் தினிதுறை குளிர்நகரஞ்
சேறணி வளவயற் சிரபுரமே. 4

4. திருநீறு அணிந்த மேனியனும், நீளுதலையுடைய பிறைச்சந்திரனோடு கங்கைநதியைச் சூடிய சடைமுடியை

உடையவனுமாகிய சிவபிரானார் உமாதேவியாரை ஒரு பங்கிலே கொண்டு இனிது உறைகின்ற குளிர்ச்சி பொருந்திய திருநகரம் சேறு நிறைந்த வளமைமிக்க வயல்கள் நிறைந்த **திருச்சிரபுரம்** ஆகும்.

நீள்மதி-பிறைச்சந்திரன் வளரும் தன்மையதாதல் பற்றி நீள்மதி என்று கூறினார்.

அணியிழை — அணிந்த இழையினையுடைய பெண். இங்கு உமையம்மையாரைக் குறித்தது.

இழை — ஆபரணம்.

குளிர்நகரம்—பொழில்கள் மிகுதியால் என்றும் குளிர்ச்சியைத் தரும் நகரம். பிறவி வெப்பத்துக்கு ஆற்றாது வருந்தும் உயிர்களுக்கு திருவடி நிழலாம் குளிர்ச்சியைத் தரும் நகரம் என்றும் கொள்ளலாம்.

அருந்திறல் அவுணர்கள் அரணழியச்
சரந்துரந் தெரிசெய்த சங்கரனார்
குருந்தொடு கொடிவிடு மாதவிகள்
திருந்திய புறவணி சிரபுரமே. 5

5. அரிய வலிமையுடைய முப்புரத்தசுரர்களின் மதில்கள் அழியும்படி அம்பினைச் செலுத்தி எரியும்படி செய்த சங்கரனான சிவபெருமானாரது ஊர், குருந்த மரங்களோடு கொடிகள் விடுகின்ற குருக்கத்திப்புதர்களும் திருத்தமாக அமைந்த காடுகளை அணியாகக் கொண்ட **திருச்சிரபுரமேயாகும்.**

அருந்திறல்—வரபலத்தால் பிறரால் வெல்லுதற்கு அரிய வலிமை.

சரம்—அம்பு; **துரந்து**—செலுத்தி.

சங்கரன்—சுகத்தைச் செய்பவன். அவுணர்களது அரணழியும்படி எரிசெய்து அனைத்துலகங்களுக்கும் சுகத்தை

அளித்த குறிப்பு தோன்ற சங்கரன் எனப்பாடினர். "இன்பஞ் செய்தலின் சங்கரன்......" என்பது சிவஞானமுனிவரின் திருவாக்கு.

புறவு—காடு

கலையவன் மறையவன் காற்றொடுதீ
மலையவன் விண்ணொடு மண்ணுமவன்
கொலையவன் கொடிமதில் கூட்டழித்த
சிலையவன் வளர்நகர் சிரபுரமே. 6

6. கலைகளின் வடிவமானவரும், வேதங்களின் **வடிவ**மானவரும், காற்று-தீ-மலை—ஆகாயம்-மண்-நீர் ஆகியவாய் இருப்பவரும், கொடிகள் பரந்த மும்மதில்களின் கூட்டை அழித்த கொலையவனும், அதன் பொருட்டு வில்லெடுத்தவனுமான பெருமானின் வளர்தலையுடைய நகர் **திருச்சிரபுரமேயாகும்.**

கலையவன், மறையவன் என்பதற்கு கலைகளை அருளிச் செய்தவன், வேதங்களை அருளியவன்எனவும் கொள்க. "ஈசான: ஸர்வ வித்யானும் ....." என்பது வேத வாக்கு.

நிலம், தீ, காற்று, ஆகாயம் என நான்கு பூதங்களைக் கூறியபடியால் எஞ்சிய நீர் என்பதும் கூட்டி உரைக்கப் பட்டது.

வானமர் மதியொடு மத்தஞ்சூடித்
தானவர் புரமெய்த சைவனிடம்
கானமர் மடமயில் பெடைபயிலுந்
தேனமர் பொழிலணி சிரபுரமே. 7

7. வானிலே பொருந்திய பிறைச்சந்திரனோடு ஊமத்தம் பூவையும் தலையிலே சூடி அசுரர்களது மூன்று புரங்களையும் எரியும்படி (அம்பு) எய்த சிவபிரானது இடம், காடுகளிலே திரிதலையுடைய மயில்கள் தமது பெடைகளோடு பயிலுதலையுடையதும், வண்டுகள் விரும்புதலையுடைய பொழில்கள் சூழ்ந்த **திருச்சிரபுரமேயாகும்.**

மறுத்தவர் திரிபுரம் மாய்ந்தழியக்
கறுத்தவன் காரரக் கன்முடிதோள்
இறுத்தவன் இருஞ்சினக் காலனைமுன்
செறுத்தவன் வளநகர் சிரபுரமே. 8

8. பகைவர்களது மூன்று புரங்களும் மாய்ந்து அழியும்படிக் கோபித்தவனும், கரிய அரக்கனை இராவணனது முடிகளும் தோள்களும் முறியும்படிச் செய்தவனும், மிக்க கோபங்கொண்ட இயமனை முன்னர் அழித்தவனுமான சிவபிரானரது வளநகர் திருச்சிரபுரமேயாகும்.

மறுத்தவர்—பகைவர்; கறுத்தவன்—கோபித்தவன்;

இறுத்தவன்—முறித்தவன்; செறுத்தவன்—அழித்தவன்.

வண்ணநன் மலருறை மறையவனுங்
கண்ணனுங் கழல்தொழக் கனலுருவாய்
விண்ணுற வோங்கிய விமலனிடம்
திண்ணநன் மதிலணி சிரபுரமே. 9

9. தாமரை மலரில் உறைகின்ற பிரம்மதேவனும், திருமாலும் திருவடிகளைத் தொழும்படி தீப்பிழம்பாய் ஆகாயமளவும் உயர்ந்து ஓங்கிய விமலனாகிய சிவபிரானரது இடம் உறுதியான சிறந்த மதில்களை அணியாகக் கொண்ட திருச்சிரபுரமேயாகும்.

பிரம்மதேவன் தனது நான்கு முகங்களாலும் நான்கு வேதங்களையும் ஓதுதலால் மறையவன் எனப்பட்டான்.

வெற்றரை உழல்பவர் விரிதுகிலார்
கற்றிலர் அறவுரை புறனுரைக்கப்
பற்றலர் திரிபுரம் மூன்றும்வேவச்
செற்றவன் வளநகர் சிரபுரமே. 10

10. ஆடையில்லாத இடையோடு திரிதலையுடைய சமணர்களும், போர்த்த ஆடைகளையுடைய புத்தர்களும் நல்ல நெறிக்குச் செலுத்தும் நூல்களைக் கற்கவில்லை. அத் தகையோர் உண்மை நெறிக்குப் புறம்பான வார்த்தைகளைச் சொல்ல, பகைவரது விண்ணிலே திரிதலையுடைய மூன்று புரங்களும் தீயினால் வெந்து போகும்படி அழித்தவனாகிய சிவபிரானது வளமை மிக்க நகரம் **திருச்சிரபுரமேயாகும்.**

சமணகுருமார்கள் ஆடையின்றித் திரிவர். புத்த குருமார்கள் உடையினைப் போர்வைபோல போர்த்து உடல் முழுவதையும் மூடிக்கொள்வர். இது முதலடியில் குறிப் பிட்ட செய்தி.

அறவுரை கற்றிலராதலால் புறனுரைப்பார் என்று காரண காரியம் இயைத்துக் கூறினர் என்க.

அருமறை ஞானசம் பந்தனந்தண்
சிரபுர நகருறை சிவனடியைப்
பரவிய செந்தமிழ் பத்தும்வல்லார்
திருவொடு புகழ்மல்கு தேசினரே. 11

திருச்சிற்றம்பலம்

11. அரிய மறைவல்ல திருஞானசம்பந்தன் அழகிய குளிர்ச்சி பொருந்திய **திருச்சிரபுர** நகரில் உறைகின்ற சிவ பெருமானது திருவடிகளைத் துதித்துப் பாடிய செந்தமிழ்ப் பாடல்கள் பத்தும் ஓதி அவற்றின் பொருளும் உணர வல்ல வர்கள், செல்வத்துடன் வாழ்வதோடு, புகழ் மிகுந்த ஒளி யுடையவர்களாகவும் ஆவர். செல்வத்தாலும் புகழாலும் ஒளி மிக்கவர்களாக ஆவார்கள்).

பரவிய — துதித்துப்பாடிய; **வல்லார்** — ஓதுதல் மட்டு மன்றி பொருளும் உணரவல்லவர்கள். **திரு**—செல்வம்; **தேசு**—புகழ், அதையுடையவர் **தேசினர்.**

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

திருச்சிரபுரம்—3

பண்: நட்டராகம்] திருச்சிற்றம்பலம் [2-ம் திருமுறை

அன்ன மென்னடை அரிவையோ டினிதுறை
அமரர்தம் பெருமானுர்
மின்னு செஞ்சடை வெள்ளெருக் கம்மலர்
வைத்தவர் வேதாந்தம்
பன்னு நன்பொருள் பயந்தவர் பருமதிற்
சிரபுரத் தார்சீரார்
பொன்னின் மாமல ரடிதொழும் அடியவர்
வினையொடும் பொருந்தாரே. 1

பதிகப் பொழிப்புரை: *1. அன்னப்பறவையின் நடை* போன்ற மென்மையான நடையையுடைய அம்பிகையோடு இனிது எழுந்தருளியிருக்கும் தேவ தேவனுன பெருமான், மின்னல் போன்று ஒளி விடுகின்ற சிவந்த சடையின் மீது வெள்ளெருக்கம் மலரைச் சூடியவர், வேதங்களின் முடிவான உபநிடதங்கள் கூறுகின்ற அரிய ஞானப்பொருளைத் தந்தவர், பருத்த மதிற் சுவர்களால் சூழப்பெற்ற **திருச்சிர புரத்து** மேவியவர், (இத்தகைய இறைவரது) சிறப்பு பொருந்திய, பொன்னுர் திருவடித் தாமரைகளைத் தொழு கின்ற அடியவர்கள் வினையோடும் பொருந்த மாட்டார்கள். (வினைகள் அவரை வந்தடையா என்பதாம்).

அமரர் தம் பெருமான் — தேவதேவன், மஹாதேவன் என்றபடி.

வேதாந்தம் — வேதங்களின் ஞானபாகமாகிய உபநிடதங்கள்.

பயத்தல் — கொடுத்தல், படைத்தல். வேதத்துக்குப் பொருள் அருளிச் செய்த வரலாறு பற்றித் திருவிளையாடற்

புராணத்தில் காண்க. சனகாதியர் நால்வருக்கு ஞான பாதத்தின் பொருளை மோன முத்திரையால் தந்தவர் எனவும் கொள்ளலாம்.

கோல மாகரி உரித்தவர் அரவொடும்
ஏனக்கொம் பிளவாமை
சாலப் பூண்டுதண் மதியது சூடிய
சங்கர ளுர்தம்மைப்
போலத் தம்மடி யார்க்குமின் பளிப்பவர்
பொருகடல் விடமுண்ட
நீலத் தார்மிடற் றண்ணலார் சிரபுரந்
தொழவினை நில்லாவே **2**

2. அழகியதும் பெரியதுமான யானையை உரித்தவர், பாம்பினோடு பன்றியின் கொம்பு இளமையான ஆமையின் ஓடு ஆகியவற்றை (மார்பினில்) மிகுதியாகப் பூண்டு, (தலையில்) குளிர்ச்சியான சந்திரனைச் சூடிய சங்கரனார், தன்னை வழிபடும் அடியார்களுக்குத் தன்னைப் போலவே தனது பேரின்ப வடிவத்தை அருள் செய்பவர், மோதுகின்ற கடலில் தோன்றிய நஞ்சினையுண்டு அதனால் நீல நிறம் பொருந்திய கழுத்தினையுடைய பெருமையுடைய தலைவர் (இத்தகைய பெருமை வாய்ந்த பிரானாரது) திருச்சிரபுரம் தொழுதலால் வினைகள் அங்ஙனம் தொழுவாரைச் சார்ந்து நில்லாது தொலைந்து விடும்.

யானை உரித்த செய்தி பற்றி முன்னும் வந்துள்ள இடங்களில் கூறியதையும் நினைவு கூர்க.

சங்கரன் — சுகத்தைச் செய்பவன்.

தம்மைபோலத் தம்மடியார்க்கு இன்பளிப்பவர்-இறைவன் பேரின்ப வடிவினன். தன்னடியடைந்தவர்க்கும் தனது பேரின்ப வடிவினை அருள்புரிகின்றான். சிவபெருமானை யோக மார்க்கத்தால் வழிபடுபவர்கள் சிவபெருமானைப் போலவே மூன்று கண்கள், முத்தலைச் சூலம், நீலகண்டம், கங்கை,

பிறை, கொன்றை, பாம்பு, எலும்பு, தலைமாலை ஆகியவை பெற்றுச் சிவசாரூபிகளாக விளங்குவார்கள். யோகமார்க்கம் எனினும் சகமார்க்கம் எனினும் ஒன்றே. சிவஞானசித்தியார் சுபக்கம் சாதனவியல் 8-ம் சூத்திரம் 2ம் அதிகரணம் 21-வது விருத்தத்தில் யோகமார்க்கம் பற்றிக் கூறியவற்றையும் இங்குக் கருத்திற் கொள்க. இங்ஙனம் சிவசாரூபம் பெற்றவர் அனேகர் புடைசூழச் சிவபெருமான் வீற்றிருந்தருளுவர் என்பதைக் குமரகுருபரசுவாமிகள் நயத்துடன் கூறுதல் காண்க. எண்ணிலாத பேர் சிவசாரூபிகள் இறைவனைச் சூழ்ந்திருக்கும்போது பிரமனும் விஷ்ணுவும் மற்றும் மறைகளும் தேவர்களும் எப்படிச் சிவபிரானைக் காண்பார்கள் என்று இந்தப் பாடலில் வினவுகின்றமை காண்க.

"கண்ணிருக்குந் திருநுதலுங் கனலிருக்குந்
திருக்கரமும் கலந்தோர் பேதைப்
பெண்ணிருக்கு மிடப்பாலும் பிறையிருக்கு
மவுலியுமாய்ப் பிரிக்க லாகா
வெண்ணிருக்குங் கணத்தொடுமா னந்தவனத்
திருப்பாரை யெங்கே காண்பார்
பண்ணிருக்கு மறைகளுமெண் கண்ணனுங்கண்
ணனுமமரர் பலருந் தாமே."

—காசிக்கலம்பகம் : 47-ம் திருப்பாடல்

குறிப்பு: எண்கண்ணன் — முகத்திற்கு இரண்டு கண்கள் வீதம் நான்கு முகங்களுக்கு எட்டுக் கண்களையுடைய பிரமதேவன்.

கண்ணன்—திருமால்; எட்டுக் கண்கள் பெற்றுங்கூடப் பிரமதேவனும், கண்ணன் என்றே பெயர் கொண்டும் திருமாலும் எப்படிக் காண்பர் என்றதொரு நயமும் காண்க.

இவ்வாறின்றி சிவபிரானை அகம் புறம் என இருவகையிலும் வழிபட்டு அவர் திருவருளைப் பெற்றவர்கள் அப்பெருமானுடைய எண் குணங்களையும் பெறுகிறார்கள்

என்பதையும் சிவஞானசித்தியார் கூறுகிறது. 'எண் குணத்துளோமே' என்பது அப்பரடிகளின் அருள்வாக்கு. இனி, சிவஞான சித்தியார் கூறுவது காண்க.

இந்தனத்தில் எரிபாலில் நெய்பழத்தின் இரதம்
எள்ளின்கண் எண்ணெயும் போல் எங்குமுளன் இறைவன்
வந்தனைசெய் தெவ்விடத்தும் வழிபடவே அருளும்
மலமறுப்போ ரான்மாவின் மலரடிஞா னத்தாற்
சிந்தனைசெய் தார்ச்சிக்கச் சிவனுளத்தே தோன்றித்
தீயிரும்பைச் செய்வதுபோற் சீவன் தன்னைப்
பந்தனையை அறுத்துத் தானாக்கித்தன் னுருவப்
பரப்பெல்லாங் கொடுபோந்து பதிப்பனிவன்பாலே.

—சிவஞானசித்தியார் 9ம் சூத்திரம்—3ம் அதிகரணம் 12—ம் திருவிருத்தம்.

இத்திருப்பாடலில் தானாக்கித் தன்னுருவப் பரப்பெல்லாம் கொடுபோந்து பதிப்பனிவன் பாலே என்பதற்குத் "தனது ஸர்வஞ்ஞத்துவாதி எண்குணங்களாகிய பேரானந்தப் பெருஞ்செல்வ முழுவதும் இவனுடையதாகச் செய்தருளுவன்" என்பது ஸ்ரீ சிவஞானமுனிவருடைய உரையைத் தழுவிய கருத்தாகும்.

எண் குணங்களாவன: தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பனவாம். இவை ஞான குணங்கள் எனவும் படும். இவ்வெண் குணங்களும் சத்து, சித்து, ஆனந்தம் என்னும் மூன்றனுள் அடங்கும். எனவே இறைவன் சச்சிதானந்தரூபி எனப்படுகிறார். இந்தப் பேரானந்த வடிவினையே தன்னடியார்களுக்கும் இறைவன் அளிக்கின்றார் என்பதே கருத்தாகக் கொள்க. மேலும் விரிவு வேண்டுவோர் சிவஞானசித்தியார்

சுபக்கம், சாதனவியல், 9ம் சூத்திரம் 3ம் அதிகாரம் 12ம் திருப்பாடற்கு ஸ்ரீ சிவஞான முனிவர் அருளிச்செய்த உரையிற் கண்டு கொள்க.

மானத் திண்புய வரிசிலைப் பார்த்தனைத்
தவங்கெட மதித்தன்று
கானத் தேதிரி வேடனு யமர்செயக்
கண்டருள் புரிந்தார்பூந்
தேனைத் தேர்ந்துசேர் வண்டுகள் திரிதருஞ்
சிரபுரத் துறையெங்கள்
கோனைக் கும்பிடும் அடியரைக் கொடுவினை
குற்றங்கள் குறுகாவே. 3

3. பெருமையுடையதும் வலிமையுடையதுமான புயத்தில் கட்டியுள்ள வில்லையுடைய அருச்சுனனை அவனது தவங் கெடுமாறு நினைத்து, அன்றொரு நாள் காட்டிலே திரிகின்ற வேடனாகக் கோலங்கொண்டு அவன் முன் தோன்றி போர் செய்ய (அதனால் அவனது தோல்வியையும் பின் அவனது உறுதியையும்) கண்டு அருள் புரிந்தவராகிய, பூக்களிலே உள்ள தேனை ஆராய்ந்து அதனையுண்ண அப்பூக்களிடம் சேர்தலையுடைய வண்டுகள் திரிகின்ற, திருச்சிரபுரத்தில் எழுந்தருளியிருக்கும் எமது தலைவராகிய சிவபிரானைக் கும்பிடுகின்ற அடியார்களைக் கொடிய வினைகளும் குற்றங் களும் வந்து அடையாவாம்.

பார்த்தன் — பிருதை என்றதொரு பெயருடைய குந்தியின் புதல்வனாகிய அருச்சுனன். வேடனாக இறைவர் எழுந்தருளிப் பார்த்தனுடன் போர் விளையாடிப் பின்னர் அவனுக்கருள் செய்த வரலாறு மாபாரதத்தில் காணப்படுவதாம். இதைச் சுருக்கமாக வெளியிட்டுள்ள நமது **வேடனும் விசயனும்** என்ற தனி நூலிலும் காண்க. இச் செய்தியினை மற்றும் பல தலங்களில் பாடிய திருப்பதிகங் களிலும் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். இதன் கருத்து சிவபிரான் பார்த்தனுக்குச் செய்த அருளே

அவனுக்குப் பாரதப் பெரும்போரில் வெற்றியைத் தந்தது என்பதாம். இதற்குச் சான்று வேதவியாஸமுனிவர் வாக்கினில் வைத்து வில்லிபுத்தூரார் என்ற புறச்சமயியான வைணவர் கூறியது காண்க.

தோத்திரமான தெய்வச் சுருதிகள் யாவும்நான்காக்
கோத்தவன் பின்னுஞ்சொல்வான் குன்றவில் லவன்பாலின்று
பார்த்தனே சென்று பாசுபதக்கணை வாங்கினல்லால்
ஆர்த்த பைங்கழலாய் எய்தாதரும் பகைமுடித்தலென்ருன்.

(இதன் பொருள்) தோத்திரங்களான தெய்வமறைகள் அனைத்தையும் நான்கு வேதங்களாகப் பிரித்து ருக், யஜுர், சாமம், அதர்வணம் என அமைத்த வேதவியாஸர் மேலும் கூறுவார்: "மேரு மலையினை வில்லாக வளைத்த சிவபெருமானிடம் இன்று அருச்சுனனே சென்று பாசுபதம் என்ற கணையினைப் பெற்று வந்தாலன்றி, அரிய பகைவர்களை வென்று முடித்தல் என்பது எய்தாது" என்று கூறினன்.

மேலும் விரிவு வேண்டுவோர் வில்லிபுத்தூரார் பாரதம் ஆரணிய பர்வம் அருச்சுனன் தவநிலைச் சருக்கம் என்ற பகுதியில் காண்பார்களாக. மாபாரதம் பறைசாற்றும் சிவபரத்துவச் செய்திகளுள் இது ஒன்ருகும்.

திருச்சிரபுரத்தில் வண்டுகள் பூவிலுள்ள தேனையே தேர்ந்து திரிவது போல அங்குள்ள மாந்தர்களும் சிவபிரானுகிய தேனையே தேர்ந்து திரிந்து கொண்டிருப்பர் என்றதொரு உள்ளுறை பொருளும் இப்பாடலின் பிற்பகுதியில் கிடைப்பது கண்டு கொள்க.

கும்பிடும் அடியரைக் கொடுவினை குற்றங்கள் குறுகா என்றமையால் கும்பிடாதவர்களைச் சென்று அவை குறுகுவது உறுதி என்பதாயிற்று. முன் பாடல்களிலும் இனிப் பின் இம்மாதிரி வருமிடங்களிலும் இங்ஙனமே கொள்க.

மாணி தன்னுயிர் மதித்துண வந்தவக்
　　காலனை உதைசெய்தார்
பேணி உள்குமெய் யடியவர் பெருந்துயர்ப்
　　பிணக்கறுந் தருள்செய்வார்
வேணி வெண்பிறை உடையவர் வியன்புகழ்ச்
　　சிரபுரத் தமர்கின்ற
ஆணிப் பொன்னினை அடிதொழும் அடியவர்க்(கு)
　　அருவினை அடையாவே 4

4. பிரமசாரியாகிய மார்க்கண்டேய முனிவரது உயிரை (ஆயுள் முடிந்ததென) அறிந்து, கவர்ந்து கொள்ள வந்த இயமனை உதைத்தவர், தன்னையே விரும்பித் தியானிக்கின்ற உண்மையான அடியவர்களது பெரிய துயரத்தைத் தருகின்ற மாறுபாடுகளையெல்லாம் அறுத்துத் திருவருள் புரிபவர், தமது சடைமுடியிலே வெண்மையான பிறைச் சந்திரனையுடையவர்; (இத்தகைய பெருமை வாய்ந்தவரும்) மிகுதியான புகழ்படைத்த திருச்சிரபுரத்து விரும்பி எழுந்தருளியிருப்பவருமான ஆணிப் பொன் போன்ற சிவபிரானரது திருவடிகளைத் தொழுகின்ற அடியவர்களை அரிய வினைகள் சென்று அடையாவாம்.

மதித்தல் — அறிதல் என்ற பொருளில் வந்தது.

உயிர்உண்ணுதல் — உயிரைக் கவர்ந்து கொண்டு செல்லுதல் என்ற பொருளில் வந்தது.

பேணி என்பது திருவடி வேட்கையையும், உள்குதல் என்பது திருவடித் தியானத்தையும குறித்தது.

ஆணிப்பொன்—உரையாணிப்பொன், உயர்ந்த பொன்.

பாரும் நீரொடு பல்கதிர் இரவியும்
　　பனிமதி ஆகாசம்
ஓரும் வாயுவும் ஒண்கனல் வேள்வியில்
　　தலைவனு மாய்நின்றார்

சேருஞ் சந்தனம் அகிலொடு வந்திழி
செழும்புனற் கோட்டாறு
வாருந் தண்புனல் சூழ்சிர புரந்தொழும்
அடியவர் வருந்தாரே. 5

5. நிலம், நீர், பல கிரணங்களை வீசும் சூரியன், குளிர்ச்சி பொருந்திய சந்திரன், ஆகாயம், காற்று, ஒளி வீசும் தீ, வேள்வித்தலைவன் என்னும் இயமானன் ஆகிய எட்டு உருவங்களாய் நின்றவராகிய சிவபிரான் விருப்பத்துடன் சேருகின்றதும், சந்தனமரம் அகிற் கட்டைகளோடு அடித்துக் கொண்டு வருகின்ற செழுமையான நீர்ப்பெருக்குகள் வந்து இறங்குகின்ற காவிரிநதியின் குளிர்ச்சி பொருந்திய நீரினால் சூழப்பெற்றதுமான திருச்சிரபுரம் என்னுந் தலத்தைத் தொழும் அடியவர்கள் (ஒரு நாளும்) வருத்தம் அடையமாட்டார்கள்.

இறைவனை அட்ட மூர்த்தியாகப் பல இடங்களில் திருமுறைகளில் கூறியுள்ளது வருமிடங்களிலெல்லாம் கண்டு கொள்க.

அட்ட மூர்த்தியாய் நின்றார் சேரும் சிரபுரம் தொழும் அடியவர் வருந்தார் எனக் கூட்டியுரைத்துப் பொருள் முடிவு காண்க.

திருச்சிரபுரத்தின் நீர்வளங்குறிக்க கோட்டாறு வாருந் தண்புனல் சூழ் சிரபுரம் என்றருளிச் செய்தார்.

கோட்டாறு – கோணிய ஆறு, வளைந்து செல்லுதலை யுடைய ஆறு.

கோட்டாறு வாருந் தண்புனல் — காவிரி நதி கொள்ளுகின்ற குளிர்ச்சி பொருந்திய நீர்.

ஊழி அந்தத்தில் ஒலிகடல் ஓட்டந்திவ்
வுலகங்க ளவைமூட
ஆழி எந்தையென் றமரர்கள் சரண்புக
அந்தரத் துயர்ந்தார்தாம்

யாழின் நேர்மொழி ஏழையோ டினிதுறை
இன்பனெம் பெருமானூர்
வாழி மாநகர்ச் சிரபுரந் தொழுதெழ
வல்வினை அடையாவே. 6

6. யுகத்தின் முடிவு காலத்தில் ஒலி மிக்க கடல்கள் வெள்ளத்தைப் பெருக்கி இவ்வுலகங்களாகியவற்றை மூடும் பொழுது தேவர்கள் சிவபிரானை அருட்கடலே! எந்தையே! என்று கூவித் துதித்துச் சரண்புகும்படியாக வானத்து உயர்ந்து நிற்பவராகிய இறைவர், யாழின் ஒலியையொத்த இனிமையான மொழி பேசும் உமாதேவியாரோடு இனிது உறைகின்ற ஆனந்தவடிவினனாகிய எம்பெருமானூர். அவர் வாழ்கின்ற, பெரிய கோயிலாகிய திருச்சிரபுரம் தொழுதெழ (அங்ஙனம் தொழுதெழுவாரை) வலிய வினைகள் வந்து அடையாவாம்.

ஊழி அந்தம் — யுகத்தின் முடிவு காலம்.

ஒட்டந்து — ஒட்டந்தந்து, அதாவது கடல்கள் நீர்ப் பெருக்கமாகிய வெள்ள ஒட்டந்தந்து.

ஆழி — அருட்கடல். அந்தரம் — வானம்

ஏழை — பெண், இங்கு உமாதேவியாரைக் குறித்தது.

இன்பன் — ஆனந்தமே வடிவானவன்; இன்பன் என்ற சொல்லுக்குக் கணவன் என்ற பொருளும் உள்ளதால் உமாதேவியாரின் கணவன் என்றும் கொள்ளலாம்.

மாநகர் — பெருங்கோயில். நகர் என்ற சொல் கோயில் என்ற பொருளிலும் வரும்.

பேய்கள் பாடப்பல் பூதங்கள் துதிசெயப்
பிணமிடு சுடுகாட்டில்
வேய்கொள் தோளிதான் வெள்கிட மாநடம்
ஆடும்வித் தகனூரோண்

சாய்கள் தான்மிக வுடையதண் மறையவர்
தகுசிர புரத்தார்தாங்
தாய்கள் ஆயினர் பல்லுயிர்க் குந்தமைத்
தொழுமவர் தளராரே. 7

7. பேய்கள் பாடவும், பூதங்கள் துதி செய்யவும் பிணங்கள் இடப்படுவதும் சுடப்படுவதுமாகிய காட்டில் மூங்கிலையொத்த தோளையுடைய காளி தேவியானவள் நாணமடையும்படி மகாதாண்டவம் ஆடிய ஒளிமிக்க வித்தகனும், மிகுதியாகப் புகழ்களை உடைய தண்மை உடைய மறையவர்களது தகுதியுடைய **திருச்சிரபுரத்துக்** கோயில் கொண்டவரும், பல்விதமான உயிர்த் தொகுதி கட்கும் தாய்களாயினவருமான சிவபெருமானை தொழுப வர்கள் (எக்காலத்தும், எக்காரணம் பற்றியும்) தளர்ச்சி அடையமாட்டார்கள்.

பிணமிடு சுடுகாடு — பிணம் இடு காடு, பிணம் சுடு காடு என்று இயைத்துப் பொருள் கொள்க.

இடுதல் — புதைத்தல்.

ஒண் வித்தகனார் என மாற்றி ஞான சொரூபன் எனப் பொருள் கொள்க. **ஒண்மை** — இங்கு ஞானத்தின் மேல் நின்றது.

வித்தகன் —அறிவுடையோன், சதுரப்பாடு உடையவன்.

சாய்கள் — புகழ்கள். **தண்மறையவர்** — மறையவர் களுக்குத் தண்மையாவது பிற உயிர்களிடம் அருளுடைமை யாம். **தண்மை** — ஈரம், குளிர்ச்சி. ஈரம் என்ற சொல் அருளையும் குறிக்கும். "தயா எனும் ஈரம்" (கம்பராமா யணம்—சுந்தர காண்டம்—சூளாமணிப் படலம் : 30)

இவ்வாறின்றி **தண்மை** என்ற சொல்லுக்கு சாந்தம், எளிமை என்ற பொருள்களும் உளவாகையால் சாந்தம் மிக்க மறையவர், எளிமை மிக்க மறையவர் எனக் கொள்ளி னும் தகும்.

இலங்கு பூண்வரை மார்புடை இராவணன்
எழில்கொள் வெற்பெடுத்தன்று
கலங்கச் செய்தலுங் கண்டுதங் கழலடி
நெரியவைத் தருள்செய்தார்
புலங்கள் செங்கழு நீர்மலர்த் தென்றல்மன்(று)
அதனிடைப் புகுந்தாருங்
குலங்கொள் மாமறை யவர்சிர புரந்தொழு(து)
எழவினை குறுகாவே. 8

8. ஆபரணங்கள் விளங்குகின்ற மலைபோலும் மார்பு உடைய இராவணன் அழகுடைய திருக்கயிலாய மலையினை எடுத்த அன்று, தமது கழலடியை (முடியும் தோள்களும்) நெரியும்படி வைத்து அவன் கலங்கும்படி செய்தலும், (பின்னர் அவனது கலக்கத்தைக்) கண்டு இரங்கி அவனுக்கு அருளும் செய்த சிவபிரானுரது, வயல்களில் செங்கழுநீர்ப் பூக்கள் மலர் தலையுடையதும் மன்றுகளில் தென்றல் புகுந்து நிறைதலையுடையதும் கூட்டமாகப் பெருமையுடைய மறையவர்கள் வாழும் திருச்சிரபுரத்தினைத் தொழுது எழ (அங்ஙனம் தொழுதெழுபவரை) வினைகள் வந்து குறுகாவாம்.

பூண் இலங்கு வரை மார்புடை இராவணன் எழில் கொள் வெற்பெடுத்த அன்று நெரியக் கழலடி வைத்துக் கலங்கச் செய்தலும், கண்டு அருள் செய்தார் சிரபுரம் எனக் கூட்டிப் பொருள் முடிவு காண்க.

சிரபுரத்தின் பெருமை கூறுங்கால் அங்குள்ள வயல்களில் செங்கழுநீர்ப் பூக்கள் மலரும், மன்றுகளில் தென்றல் காற்று நிறையும், மற்றும் அங்கு கூட்டங் கூட்டமாக பெருமை மிக்க மறையவர்கள் வாழ்வர் என்பதாம். அருள் செய்தார் சிரபுரம், மறையவர் சிரபுரம் என ஈரிடத்தும் இயையும்.

மன்று—சபை, வெளியிடம்; ஆரும்—நிறையும்.

குலங்கொள் மறையவர் — கூட்டமாக வசித்தலை மேற்கொண்ட மறையவர்கள். அல்லது குலப்பெருமை மிக்க மறையவர் என்று கொள்ளலுமாம்.

மாமறையவர் — பெருமையுடைய மறையவர்; குலங் கொள் மறையவர், மாமறையவர் என்று ஈரிடத்தும் இயைத்துப் பொருள் கொள்க.

வண்டு சென்றணை மலர்மிசை நான்முகன்
மாயனென் றிவரன்று
கண்டு கொள்ளவோர் ஏனமோ டன்னமாய்க்
கிளறியும் பறந்துந்தாம்
பண்டு கண்டது காணவே நீண்டவெம்
பசுபதி பரமேட்டி
கொண்ட செல்வத்துச் சிரபுரந் தொழுதெழ
வினையவை கூடாவே. 9

9. வண்டுகள் சென்று சேர்தலையுடைய தாமரை மலர் மேல் உறையும் பிரமதேவன், மாயன் எனப் பெயரிய திருமால் ஆகிய இவர்கள் அன்று அடி முடி கண்டு கொள்ள பன்றியோடு அன்னத்தின் உருவமெடுத்துப் பூமியைத் தோண்டிச் சென்றும், வானிலே பறந்து சென்றும் முன் கண்டது போலவே அடிமுடியறியாத தன்மையைக் காணும் படியாகவே நீண்டு உயர்ந்த எமது பசுபதியும், பரமேட்டியு மாகிய சிவபிரானுர் கோயிலாகக் கொண்ட செல்வம் நிறைந்த திருச்சிரபுரம் தெழுதெழ (அங்ஙனம் தொழு தெழுபவர்களை) வினைகளானவை வந்து கூடாவாம்.

நான்முகன் அன்னமாய்ப் பறந்தும், மாயன் ஏனமாய்க் கிளறியும் என்று எதிர் நிரல் நிறையாகப் பொருள் கொள்க.

அன்று — அழற்பிழம்பாய் நிறை அன்று, (பண்டறிசுட்டு)

பண்டு கண்டது காணவே என்பதைப்பண்டு கண்டதே காண அதாவது காணவே என்பதில் உள்ள (ஏ)காரத்தை கண்டது என்பதுடன் சேர்த்துப் பொருள் கொள்வது சிறக்கும். போரிட்ட நான்முகனும் திருமாலும் திருமுடியும் திருவடியும் காண இயலாதபடி அவர்கள் முன் நின்ற அழற்பிழம்பை பறந்தும் கிளறியும் தமது ஆற்றலைக் காட்டிய

பின்னரும் அங்ஙனமே அடி முடி காண இயலாத அழற்பிழம்பாகவே காணும்படி நீண்ட என்று கூறியதாகக் கொள்க. பசுபதி — உயிர் பசு அதன் தலைவன் அல்லது பதி சிவபெருமான், பசூனாம் பதயே நம: என்பது வேதம். இப்பெயர் சிவபெருமானுக்கே உரிய சிறப்புப் பெயராகும்.

பரமேட்டி — பரம + இட்டி, பரம-மேலான இட்டி-யாகம்; மேலான யாகம் எனப் பொருள்பட்டு அதன் பயனாக உள்ளவன் என்ற பொருளைத் தரும். அல்லது இட்டி என்ற சொல்லுக்கு 'விருப்பம்' என்ற பொருளும் உள்ளதால் மேலான விருப்பம்' என்று பொருள்பட்டு உயிர்கள் கொள்ள வேண்டிய 'மேலான விருப்பமாக' உள்ளவன் என்றும் பொருள் கொள்ளலாம். அதாவது சிவபெருமானை அடைவதே உயிர்களது மேலான விருப்பமாதல் வேண்டும் என்பதாம்.

நீண்ட — இங்கு 'உயர்ந்த' என்ற பொருளில் வந்தது.

பசுபதி, பரமேட்டி கொண்ட சிரபுரம், செல்வத்துச் சிரபுரம் என இயையும்.

பறித்த புன்தலைக் குண்டிகைச் சமணரும்
பார்மிசைத் துவர்தோய்ந்த
செறித்த சீவரத் தேரருந் தேர்கிலாத்
தேவர்கள் பெருமானார்
முறித்து மேதிகள் கரும்புதின் றாவியின்
மூழ்கிட இளவாளை
வெறித்துப் பாய்வயற் சிரபுரந் தொழவினை
விட்டிடும் மிகத்தானே. 10

10. தலைமயிர் பறிக்கப்பட்ட புன்தலையும், குண்டிகை என்னும் நீர்ப்பாத்திரத்தையும் கொண்ட சமணர்களும், இந்நிலவுலகில் காவியில் தோய்த்தெடுத்த அடர்ந்த சீவரப் போர்வை போர்த்திய பௌத்தர்களும் தேர்ந்து அறியாத தேவர்கள் தலைவனாகிய சிவபெருமானது இடமாகிய,

எருமைகள் கரும்பை முறித்துத் தின்றுவிட்டுக் குளத்தில் மூழ்க (அக்குளத்தில் உள்ள) வாளை மீன்கள் அஞ்சிப் பாய்கின்ற வயல்களையுடைய **திருச்சிரபுரம்** தொழ வினைகள் மிகவும் விட்டுவிடும்.

புன்தலை—மயிர்கள் பறிக்கப்பட்டு அற்பமாகக் காட்சியளிக்கும்தலை. சமணகுருமார்கள் தலைமயிரை ஒவ்வொன்ருகப் பறித்தெடுப்பர்.

சீவரத்தேரர்—காவியுடை போர்த்த பௌத்தர்.

மேதி—எருமை; **ஆவி**—குளம்; **வாளை**—ஒரு வகை மீன்; **வெறித்து**—அஞ்சி.

பரசு பாணியைப் பத்தர்கள் அத்தனைப்
பையர வோடக்கு
நிரைசெய் பூண்திரு மார்புடை நிமலனை
நித்திலப் பெருந்தொத்தை
விரைசெய் பூம்பொழில் சிரபுரத் தண்ணலை
விண்ணவர் பெருமானைப்
பரவு சம்பந்தன் செந்தமிழ் வல்லவர்
பரமனைப் பணிவாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பரசு என்னும் ஆயுதமேந்திய திருக்கரத்தினை உடையவரும், பக்தர்களுக்குத் தந்தையானவரும், விஷப்பையினையுடைய பாம்பிஞேடு எலும்பும் வரிசையாக பூணுகின்ற திருமார்புடைய நிமலனும், முத்துக்களின் கொத்துப் போல் அமைந்தவரும், மணந்தருகின்ற பூக்களையுடைய சோலைகளையுடைய **திருச்சிரபுரத்துக்** கோயில் கொண்ட தலைவரும், தேவர்கட்கெல்லாம் பெருமானுமான சிவபிரானைத் துதித்துப் பாடிய திருஞானசம்பந்தனது செந்தமிழ்ப் பாடல்கள் வல்லவர்கள் அப்பரமனுன பெருமானைப் பணிபவர்களாக ஆவார்கள். அதாவது அப்பெருமானின் மெய்யடியார்களாக ஆவார்கள் என்பதாம்.

பரசு—மழுவென்னும் ஆயுதம். கோடாலி போன்ற வடிவுடையதாம். பாணி—கையையுடையவன்.

அத்தன்—தந்தை, கடவுள் என்ற பொருள் தருஞ் சொல். சிவன் என்றே பொருளும் உண்டு.

அக்கு-எலும்பு; பிரமவிஷ்ணுக்களுடைய எலும்புக்கூடு.

நிமலன்—மலத்தை நீங்கச் செய்பவன்.

நித்திலப் பெருந்தொத்து — முத்துக்களின் பெருங் கொத்து போன்றவன். மேனியின் மீது உள்ள திருநீற்றின் வெண்மை தோன்றக் கூறியதாகக் கொள்ளலாம்.

அண்ணல் — பெருமையுடையவன், தலைவன்; சிவன் என்றே பொருள் உள்ளது.

சிவம்

சிவஞான பூஜாமலர்—1982

சென்ற ஆண்டு போலவே இந்த ஆண்டும் சிவஞான பூஜாமலர் வெளியிடத் திருவருள் துணை கொண்டு நிச்சயிக்கப்பட்டுள்ளது. இந்த மலரின் நோக்கம், பயன் முதலியன சென்ற ஆண்டு மலரில் கொடுத்துள்ளதேயாகும்.

சிவஞான பூஜைக்குச் சிவார்ப்பணமாகத் தங்கள் நன்கொடைகளை வரவேற்கின்றோம்.

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
பதிப்பாசிரியர்.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருவேணுபுரம்—1

(சீகாழி)

பதிகவரலாறு : சீகாழியின் பன்னிரு திருப்பெயர்களுள் ஒன்றான **திருவேணுபுரம்** என்ற பெயரில் பாடியருளியது இத்திருப்பதிகம். இத்தலைப்பில் மூன்று திருப்பதிகங்கள் உள்ளன. இவற்றுள் **வண்டார்குழல் அரிவையொடும்** எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடப்பட்ட காலம் பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே அத்திருப்பதிகம் தலயாத்திரை முறையில் உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும். வரலாறும் காலமும் விதந்து 'கூறப்படாத **திருவேணுபுரத்து** மற்றைய இரண்டு திருப்பதிகங்கள் மட்டும் இங்குப் பிரசுரிக்கப்படுகின்றன.

சூரபதுமன் ஆட்சியில் அவனுக்கு அஞ்சி ஒளித்து இத்தலத்தில் பூசித்த இந்திரனுக்கு இறைவர் **வேணு** (மூங்கில்) வடிவமாகத் தோன்றி திருவருள் புரிந்தமையால் இத்தலம் **வேணுபுரம்** என்ற பெயர் பெற்றது.

பண் : இந்தளம்] திருச்சிற்றம்பலம் **[2-ம் திருமுறை**

நிலவும் புனலும் நிறைவா ளரவும்
இலகுஞ் சடையார்க் கிடமாம் எழிலார்
உலவும் வயலுக் கொளியார் முத்தம்
விலகுங் கடலார் வேணு புரமே. 1

பதிகப் பொழிப்புரை: *1.* பிறைச்சந்திரனும் கங்கையும் நிறைந்த ஒளியுடைய பாம்பும் விளங்குகின்ற சடையினை உடைய இறைவர்க்கு இடமாவது, எழில் மிக்க மகளிர் உலவுகின்றதும், ஒளி பொருந்திய முத்துக்களை வயல்களுக்கு ஒதுக்குகின்ற கடல் பொருந்தியதுமான **திருவேணுபுரம்** ஆகும்.

நிலவு — சந்திரனின் ஒளி, இங்குச் சந்திரனையே குறித்தது.

உலவும் — உலாவுகின்ற, அதாவது பொழுதுபோக்காக விளையாடுதலைச் செய்கின்ற அல்லது சாரிசாரியாக நடக்கின்ற என்பன போன்ற பொருள்களைத் தரும்.

எழிலார் உலவும் வயலுக்கு.........விலகுங்கடல் எனச் சேர்த்துப் பொருள் கொண்டால் எழில் மிக்க உழத்தியப் பெண்கள் பயிலுகின்ற வயல்களுக்கு ஒளி மிக்க முத்துக்களை ஒதுக்குங் கடல் என்ற பொருள் கிடைக்கும்.

அரவார் கரவன் அமையார் திரள்தோள்
குரவார் குழலா ளொருகூ றனிடங்
கரவா தகொடைக் கலந்தா ரவர்க்கு
விரவா கவல்லார் வேணு புரமே. 2

2. பாம்பைக் கங்கணமாக அணிந்த கையினையுடையவரும், மூங்கிலையொத்த திரண்ட தோளையும் குரவமலர் சூடிய கூந்தலையுடையவளுமான உமா தேவியாரை ஒரு பாகமாகவுடையவருமாகிய சிவபெருமானுக்கு இடமாவது மறைத்தலில்லாத ஈகையுடன் கூடியவர்களுக்கு நட்பாக வல்லவர்கள் வாழுகின்ற திருவேணுபுரம் ஆகும்.

கரவன் — கரத்தினை உடையவன்; அமை —மூங்கில்

குரவு—குராமலர்மாலை. குழலாள் — கூந்தலையுடைய அம்பிகை.

கரவாத கொடை — இரப்பவர்க்கு இல்லை என்னாது ஈத்துவக்கும் வள்ளல்தன்மை.

ஆகம் மழகா யவள்தான் வெருவ
நாகம் உரிபோர்த் தவன்நண் ணுமிடம்
போகந் தருசீர் வயல்சூழ் பொழில்கள்
மேகந் தவழும் வேணு புரமே. 3

3. அழகிய திருமேனியையுடைய அம்பிகை அஞ்சும்படி யானையின் தோலை போர்த்தவனாகிய சிவபெருமான் விரும்பி எழுந்தருளியுள்ள இடம், நல்ல விளைபொருள்களைத் தருகின்ற சிறந்த வயல்கள் சூழ்ந்த சோலைகளில் மேகங்கள் தவழுகின்ற திருவேணுபுரம் ஆகும்.

ஆகம்—சரீரம் இங்கு முழு உருவத்தினையே குறித்து நின்றது. நாகம் — யானை. போகம் — வயல்களினின்றும் விளைவாகக் கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களை இங்குக் குறித்தது.

பொழில்கள் மேகந்தவழும் — பொழில்களில் மேகம் தவழும் என்றோ பொழில்கள் மேகத்தில் தவழும் என்றோ அதாவது அவ்வளவு உயர்ச்சியுடையனவாம் என்றோ பொருள் கொள்ளலாம்.

காசக் கடலில் விடமுண் டகண்டத்(து)
ஈசர்க் கிடமா வதுஇன் நறவ
வாசக் கமலத் தனம்வன் திரைகள்
வீசத் துயிலும் வேணு புரமே. 4

4. மணிகளையுடைய பாற்கடலில் தோன்றிய விஷத்தினை உண்டருளிய கழுத்துடன் கூடிய ஈசனுக்கு இடமாவது இனிய தேனையும் மணத்தையும் உடைய தாமரை மேலுள்ள அன்னப் பறவைகள் வலிய அலைகள் வீசுதலால் துயில் கொள்ளுகின்ற திருவேணுபுரம் ஆகும்.

காசக்கடல்—காசு+அக்கடல்; காசு—மணிகள். அக்கடல் என்பதிலுள்ள 'அ'கரச்சுட்டு, பின்னால் வரும் 'விடமுண்ட' செய்தியால், பாற்கடலின்றும் விடமுண்டாகிய செய்தி அனைவரும் அறிந்ததொன்றாகலின், அப் பாற்கடலையே குறிக்கும்.

நீர்நிலைகளில் தாமரை மலர்கள் மேல் அன்னப் பறவைகள் உள்ளன. நீரின் அலைகள் அம்மலர்களை அசைத்தலால் தொட்டிலில் இட்டுத் தாலாட்டப்படுவது போன்று

அன்னங்கள் துயில் கொள்ளுகின்றன என்பது பின்னிரண்டு வரிகளில் குறிப்பிடப்பட்ட செய்தியாகும்.

அரையார் கலேசேர் அனம்மென் னடையை
உரையா வுகந்தா னுறையும் இடமாம்
நிறையார் கமுகின் நிகழ்பா ளேயுடை
விரையார் பொழில்சூழ் வேணு புரமே. 5

5. இடையில் உடுத்தல் பொருந்திய ஆடை சேர்ந்த, அன்னத்தினது மென்மையான நடையினேயுடைய, உமா தேவியாரை (ஒரு கூறுகவுடையவன் என்று பிறரெல்லாம் புகழ்ந்து துதித்தலே) ஒரு சிறப்பு உரையாகக் கொண்டு உயர்ந்தவனுகிய சிவபெருமான் உறையும் இடமாவது, வரிசையாக அமைந்த பாக்கு மரங்களில் விளங்குகின்ற பாளேகள் உடைதலால் பரவும் மணம் உடைய பொழில் சூழ்ந்த திருவேணுபுரம்ஆகும்.

அரை ஆர் கலேசேர் அ(ன்)னம் மெல் நடை—இங்கு அந்த நடையினேயுடைய உமாதேவியாரைக் குறித்து நின்றது. **கலே**—ஆடை; அரையினில் தரித்துக் கொள்ளும் **மேகலே** யுமாம்.

உகந்தான் — உயர்ந்தவன்; மகிழ்ந்தவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

ஒளிரும் பிறையும் முறுகூ விளவின்
தளிருஞ் சடைமே லுடையா னிடமாம்
நளிரும் புனலின் நலசெங் கயல்கள்
மிளிரும் வயல்சூழ் வேணு புரமே. 6—7

6-7. ஒளிவிடுகின்ற பிறைச்சந்திரனும், வில்வத்தின் தளிரும், தனது திருச்சடையின்மேல் உடைய பெருமானது இடம், குளிர்ச்சியுடைய நீரில் நல்ல செழுமையான கயல் மீன்கள் விளங்கும் வயல்கள் சூழ்ந்த **திருவேணுபுரமாகும்.**

கூவிளம்—வில்வம்; தளிர்—கொழுந்து

செங்கயல்கண் —என்பது பாடமாயின் அடுத்த வரியில் உள்ள மிளிரும் என்பதோடு இயைத்து கயல்கள் மகளிரது கண்கள்போல் விளங்கும் என உவமை விரித்துப் பொருள் கொள்க. கயல்களைப் பெண்களின் கண்களுக்கு உவமை யாகக் கொள்வது போலவே பெண்களின் கண்களை கயல் களுக்கு உவமையாகக் கொண்டதாம் என்க. **மிளிர்தல்**— நட்சத்திரங்களைப்போல விட்டு விட்டுப் பிரகாசித்தல்.

ஏவும் படைவேந் தனிரா வணனை
ஆவென் றலர அடர்த்தா னிடமாம்
தாவும் மறிமா னொடுதண் மதியம்
மேவும் பொழில்சூழ் வேணு புரமே. 8

8. பகைவர்கள் மேல் ஏவுதலையுடைய படைகளைக் கொண்ட இலங்கை அரசனாகிய இராவணனை "ஆ" என்று அவன் அலறும்வண்ணம் அடர்த்தவனாகிய பெருமானது இட மாவது, தாவுகின்ற மறிகளோடும் மான்களோடும் குளிர்ச்சி பொருந்திய சந்திரனும் மேவுகின்ற பொழில்கள் சூழ்ந்த திருவேணுபுரம் ஆகும்.

ஏவும் **படை** — குறிதவறாது வினையாற்றும் ஆயுதம் எனப்பொருள் உரைத்தனர் தருமையாதீனக் குறிப்புரை ஆசிரியர்.

"ஆ" துன்பப்பட்டோர் அலறும் ஒலிக்குறிப்பு. இது ஆ ஆ என்று அடுக்கியும்வரும்.

அடர்த்தல்—தாக்குதல், இங்குக் கால்விரலை ஊன்றி அழுத்தியதைக் குறிக்கும்.

மறி என்பது மான் கன்றுகளையும் மான் என்பது முதிர்ந்தவைகளையும் குறிக்கும் எனக்கொள்க.

பொழில்களின் உள்ளே மறிகளும் மான்களும் மேவும். மேலே தண்மதியம் மேவும். இத்தகைய பொழில்கள் சூழ்ந்த வேணுபுரம் என்பதாம்.

கண்ணன் கடிமா மலரில் திகழும்
அண்ணல் இருவர் அறியா இறையூர்
வண்ணச் சுதைமா ளிகைமேற் கொடிகள்
விண்ணில் திகழும் வேணு புரமே. 9

9. கண்ணனும் (திருமாலும்) மணம்மிக்க தாமரை மலர் மேல் திகழுகின்ற பிரமதேவனும் ஆகிய இருவரும் அறியாத தலைவனாகிய சிவபிரானது ஊர், அழகிய சுதை வேலைப்பாடுகளைக் கொண்ட மாளிகைகளின் மேல் உள்ள கொடிகள் விண்ணளவு சென்று விளங்கும் **திருவேணுபுரம்** ஆகும்.

இறை — சிவபெருமான்; **வண்ணம்** — அழகு; **சுதை** — சுண்ணும்புச் சாந்து, இங்கு அதனால் செய்யப்படும் சித்திர வேலைப்பாடுகளைக் குறித்தது.

போகம் மறியார் துவர்போர்த் துழல்வார்
ஆகம் மறியா அடியார் இறையூர்
மூகம் மறிவார் கலைமுத் தமிழ்நூல்
மீகம் மறிவார் வேணு புரமே. 10

10. இம்மை, மறுமை ஆகிய இருவகையும் போகம் அறியாத சமணர்களும், துவர் ஆடையினைப் போர்த்துக் கொண்டு திரியும் பௌத்தர்களுமாகிய புறச்சமயிகளின் உருவத்தையும் கண்ணெடுத்துப் பார்த்தறியாத அடியார்களுக்கு இறைவனாகிய சிவபிரானது ஊர், மௌனநிலையின் பெருமையை உணர்ந்த ஞானியரும், முத்தமிழ்க் கலைநூல்களால் வானோர்க்கும் உயர்ந்த உலகமாகிய வீட்டின்பத்தின் இயல்புகளை அறிந்தவர்களும் வாழும் **திருவேணுபுரமே** ஆகும்.

போகம் — இச்சொல் இன்ப அனுபவத்தைக் குறிக்கும். **போகம் அறியார்** — தவம் என்ற பெயரால் அதற்கு மாறான அவமேயான தலை பறித்தல், சுடு பாறையிற் கிடத்தல்,

நின்றுண்ணல், நீராடாமை முதலிய செயல்களால் இவ்வுடலால் அடையக்கூடிய இம்மைப் பயனையும், இச்செயல்களால் மேலும் வினை பெருக்கிப் பிறவிக்கே ஏதுவாகிய நெறி சார்தலினால் வீட்டுப் பேற்றையும் நுகர்தலை அறியாதவர்களாகையால் **போகம் அறியார்** எனக் கூறியருளியதாகக் கொள்க. இவ்வாறின்றிச் 'சிவானந்த போகத்தை அறியாதவர்' எனக் கூறினர் திருத்தருமையாதீனக் குறிப்புரை ஆசிரியர்.

ஆகம்—சரீரம், இங்கு உருவம் முழுமையும் குறித்தது. **ஆகம்மறியார்** என்றது சிவநிந்தனை செய்யும் சமணர்களைக் கண்ணெடுத்தும் பாராதவர் என்று குறிப்பிட்டதாம்.

மூகம் — மௌனநிலை. **மீகம்** — மேலான வானுலகம், இங்கு வீடு பேற்றைக் குறித்தது. **மீ** மேலான, **கம்**-ஆகாயம்

இத்திருப்பாடலுக்கு இராணிப்பேட்டை புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனார் அவர்கள் எழுதியுதவிய விளக்கத்துடன் கூடிய பொழிப்புரை:—

"தவம் என்று பாயிடுக்கித் தலைபறித்து ஊத்தை வாயோடு நின்றுண்டு உழலுதலினால் இம்மையின்பத்தையும், தவமென்று வினைபெருக்கிச் சார்பல்லா நெறி சார்தலினால் வீட்டுப்பேற்றையும் நுகர்தலின்றி ஒழிந்து நிற்பதால் போகம் அறியாத சமணரும், பழுப்பு ஏறிய ஆடையை உடலில் போர்த்துழலும் சாக்கியரும் முறையே கைக்கொண்டு ஒழுகும் அங்காகமம், பூர்வாகமம், பஹுசுருதியாகமம் என்னும் சமண ஆகமங்களும் வினயபிடகம், ஸூத்திரபிடகம், அபிதர்மபிடகம் என்னும் பௌத்த ஆகமங்களும் உண்மைக்கு முரணியவாதலின் அவைகளை ஏறெடுத்தும் பாராது சிவநெறிபற்றி ஒழுகும் அடியவர்கட்கு இறைவன் வாழும் ஊராவது, வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய் எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச் சொல்லாமல் சொன்ன மூக

நிலையின் உண்மையை உணர்ந்த ஞானியரும், கலைகள் கூடிய முத்தமிழ் நூலால் வீட்டியல்பு உணர்ந்தாரும் வாழும் **வேணுபுரமே** என்க.

ஆகம் — ஆகமம் என்பதன் குறுக்கல் விகாரம். பிள்ளையார் யாண்டும் அவர் சொல் கேளற்க என்றே அருளியுள்ளதாலும் சைவர் பிறசமயத்தவரை வெறுப்பவர் அல்லராதலாலும், சமணர்களே கண்டு முட்டு கேட்டு முட்டு உடையவராதலாலும் இவ்வாறு கொள்ளப்பட்டது. **ஆகம்** உடம்பு என்று கொண்டு உரை செய்வாருமுண்டு.''

கலமார் கடல்போல் வளமார் தருநற்
புலமார் தருவே ணுபுரத் திறையை
நலமார் தருஞா னசம்பந் தன்சொன்ன
குலமார் தமிழ்கூ றுவர்கூர் மையரே. 11

திருச்சிற்றம்பலம்

11. மரக்கலங்கள் நிறைந்த கடலைப்போல வளங்கள் பொருந்திய நல்ல விளை நிலங்களையுடைய **திருவேணுபுரத்தில்** கோயில் கொண்டுள்ள இறைவனாகிய சிவபிரானை நன்மை நிறைந்த திருஞானசம்பந்தன் சொன்ன மேன்மை மிக்க இத்தமிழ்த் திருப்பதிகத்தை அன்போடு பாராயணஞ் செய்பவர்கள் நல்ல அறிவினை உடையவர்கள் ஆவார்கள்.

கடலினின்றும் சங்கு, முத்து, பவளம் போன்ற பல பொருள்கள் கிடைத்தலால் கடல் வளமுடையதாயிற்று. நல்லபுலன்கள் அதாவது நன்செய் நிலங்கள் நெல், கரும்பு முதலிய நல்ல விளைபொருள்களைத் தருதலால் அவையும் வளமுடையவாயின. சீகாழிப்பதி கடல் சார்ந்து இருத்தலால் கடல் வளத்தையும், விளைநிலங்கள் மிக்க மருத நிலத்தையும் சார்ந்திருத்தலால் வயல் வளத்தையும் ஒருங்கே கூறியருளினர் போலும்.

புலம் என்ற சொல்லுக்கு அறிவு என்ற பொருளும் உண்மையால் **நற்புலம்** நல்ல அறிவு என்று பொருள்பட்டு

நல்ல அறிவுடையவர்கள் நிறைந்த வேணுபுரம் என்ற பொருளைத் தருவதாகக் கொள்ளினும் இழுக்காகாது.

நலமார்தரு – நன்மை நிறைந்த அல்லது பொருந்திய, இங்கு நன்மையாவது சிவனருளைப் பெற்றுத் தருதலாம்.

குலம் – மேன்மை என்ற பொருளில் வந்தது.

கூர்மை — அறிவு, அதனையுடையவர் கூர்மையர் ஆவர். திருஞானசம்பந்தரது மேன்மைமிக்க தமிழ்த்திருப்பதிகங்களை ஓதுபவர்கள் கூர்மையான அறிவுடையவர்கள் ஆவர் என்பது கருத்தாகக் கொள்க. இவ்வாறின்றி, **கூர்மையர்** என்பதற்குத் திருவருட் பெருக்கம் உடையவர் எனக் கூறினர் திருத்தருமபுர ஆதினக் குறிப்புரையாசிரியர்.

குறிப்பு : இப்பதிகத்தின் 7-வது திருப்பாடல் சிதைந்து போய்க் கிடைக்காதாயிற்று.

சிவம்

ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை—2

திருச்சிற்றம்பலம்

அரியோடு நான்முகத்தோன் ஆதிசுரர்க் கெல்லாம்
தெரியாமை செந்தழலாய் நின்ற—ஒருவன்சீர்
தன்தலையின் மேல்தரித்த சம்பந்தன் தாளிணைகள்
என்தலையின் மேலிருக்க என்று.

திருச்சிற்றம்பலம்

[நம்பியாண்டார் நம்பி—11ம் திருமுறை]

திருமாலோடு நான்முகன் முதலிய தேவர்களுக்கெல்லாம் அறியவொண்ணாது செந்தழல் வடிவாய் நின்ற ஒப்பற்றவனாகிய சிவபிரானது பெருமை மிக்க திருவடிகளைத் தனது தலையின் மேற்கொண்ட திருஞானசம்பந்தரது திருவடிகள் எனது தலையின் மீது இருக்க என்று இத்திருப்பாடலின் மூலம் நம்பியாண்டார் நம்பி வேண்டுகின்றார்.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருவேணுபுரம் — 2

(சீகாழி)

பண் : காந்தாரம்] திருச்சிற்றம்பலம் [2-ம்திருமுறை

பூதத்தின் படையினீர் பூங்கொன்றைத் தாரினீர்
ஓதத்தின் ஒலியோடும் உம்பர்வா னவர்புகுந்து
வேதத்தின் இசைபாடி விரைமலர்கள் சொரிந்தேத்தும்
பாதத்தீர் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே. 1

பதிகப்பொழிப்புரை : 1. பூதகணங்களைப் படையாக உடையீர், கொன்றைப்பூமாலையை அணிந்தீர், கடலின் ஒலியோடு தேவருலகத்திலுள்ள தேவர்கள் உள்ளே புகுந்து வேத மந்திரங்களை அவற்றிற்குரிய ஸ்வரத்துடன் பாடி மணம் மிக்க மலர்களைத் தூவி வழிபடும் திருவடிகளை உடையீர், (இத்தகைய சிறப்பு வாய்ந்த நீர்) **திருவேணு புரத்தை** உமது திருப்பதியாகக் கொண்டு எழுந்தருளியிருக்கின்றீர். (என்னே உமது கருணை என்றபடி, வரும் பாடல்களிலும் இவ்வாறே கொள்க)

ஓதம் —கடல். கடலின் முழக்கமும், அதே போல வேதத்தின் முழக்கமும் நிறைந்திருந்தது என்பது குறிக்க **"ஓதத்தின் ஒலியோடு……………வேதத்தின் இசைபாடி"** என்றருளிச் செய்தார்.

உம்பர் வானவர் — மேலிடத்தவராகிய தேவர்கள். இவ்வாறின்றி **'உம்பர் வானவர்'** என்பதை உம்மைத் தொகையாகக் கொண்டு **'உம்பரும் வானவரும்'** என்று **'உம்'** மை விரித்துப் பொருள் கொள்ளினும் அமையும். இவ்வாறு கொண்டால் **'வானவரும் உம்பரும்'** என மாற்றித் தேவர்களும் அவர்களுக்கும் மேலிடத்தவராகிய பிரம்ம லோகம், விஷ்ணுலோகம் முதலிய இடங்களில் உள்ளவரும்

எனப் பொருள் கொள்க. தேவர்களும், பிரம்ம, விஷ்ணு உலகத்தவர்களும் மண்ணுலகம் வந்து வேத மந்திரங்களை இசையுடன் பாடி இறைவனை அருச்சிக்கின்றனர் என்பது கருத்து. "உம்பரும் வானவரும் உடனே நிற்கவே எனக்குச் செம்பொனைத் தந்தருளி........" எனத் தொடங்கும் சுந்தரர் திருப்பாடலிலும் உம்பரும் வானவரும் எனத் தனித்தனியாகப் பிரித்துக் கூறியுள்ளது காண்க. (சுந்தரர் தேவாரம் திருமுதுகுன்றம்—நட்டராகப் பண்ணில் அமைந்த பதிகம் 2-ம் திருப்பாடல்)

வேதத்தின் இசை—வேத மந்திரங்களும் ஏழு விதமான சந்தங்களில் எடுத்தல், படுத்தல், நலிதல் என்ற மூவகையான ஓசைகளுடன் இசைக்கப் படுதலால் இங்ஙனம் கூறினர். இந்த மூவகை ஓசைகளும் 'ஸ்வரம்' எனப்படும். வடமொழியில் இவை முறையே உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் எனப்படும். ஏழுவகைச் சந்தங்கள் காயத்ரி, உஷ்ணிக், அனுஷ்டுப், த்ருஷ்டுப், ப்ருஹதி, பங்க்தி, ஜகதி எனப்படும்.

சுடுகாடு மேவினீர் துன்னம்பெய் கோவணந்தோல்
உடையாடை யதுகொண்டீர் உமையாளை ஒருபாகம்
அடையாளம் அதுகொண்டீர் அங்கையினிற் பரசுவெனும்
படையாள்வீர் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே. 2

2. சுடுகாட்டில் ஆடுதலை விரும்பினீர் தைத்தலையுடைய கோவணத்தையும் தோலையும் உடையும் ஆடையுமாகக் கொண்டீர், உமாதேவியாரை ஒரு பாகம் (மாதியலும் பாதியன் என்பதற்கு) அடையாளமாகக் கொண்டீர், அழகிய கையினில் பரசு என்னும் படையினை ஆள்வீர், (இத்தகைய பெருமை வாய்ந்த நீர் இந்நிலவுலகத்து) திருவேணுபுரத்தை உமது இருப்பிடமாகக் கொண்டருளினீர்.

துன்னம் — தைத்தல் தொழில். இறைவனுடைய கோவணத்தில் தைத்தல் தொழில் ஏதுமில்லையாயினும்

உடை என்ற பொதுமை பற்றி துன்னம்பெய் கோவணம் என்றருளினர். சாதியடைமொழி எனக் கொள்க. இறைவனரது கோவணமாவது யாது என்பதைப் பின்வரும் திருவாசகப் பாடலால் அறிக;

"என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ.'

(திருவாசகம் : திருச்சாழல்—2)

(இதன்பொருள்) எமக்குத்தந்தையும், தலைவனும் ஆயசிவபெருமானே எல்லோருக்கும் ஈசனுவான். அத்தகையானகிய ஈசன் மிகவும் (வறுமையுற்றவனைப்போல் நெய்தமைத்த கோவணந்தரியாது) கிழிந்த துணிகளைத் தைத்து அமைத்த கோவணத்தைக் கொள்ளுவது என்னே? இது வினு. இதற்கு விடை, இறைவனர் தரிக்கும் அக்கோவணம் சுத்தமாயையின் காரியமாகிய நிலைபெற்ற மெய்ந்நூல்களும் அவைகளின் பொருள்களுமே யாகும், நான்கு வேதங்களே சரடாகும். எனவே நான்மறைகளாகிய சரட்டுடன் பிணிப்புண்ட மெய்ந்நூல்களும் அவற்றின் பொருள்களுமே இறைவனரது கோவணம் என அறிக.

துன்னம்பெய் என்ற அதே சொற்றொடராட்சி இத்திருப் பாடலிலும் வந்தது காண்க.

உடை, ஆடை இரண்டும் ஒரே பொருளைத் தருமாயினும் இரண்டும் ஒருங்கு கூறப்பட்டிருத்தலால் உடுப்பது உடையென்றும், மேலே போர்த்திக் கொள்ளும் தோல் ஆடையென்றும் கொள்க.

பரசு — மழுவென்னும் ஆயுதம். அதை ஆளுதலாவது அங்கையினில் தரித்து சமயம் நேர்ந்துழி எதிரிகள் மீது செலுத்துதலாம்.

கங்கைசேர் சடைமுடியீர் காலனைமுன் செற்றுகந்தீர்
திங்களோ டிளஅரவந் திகழ்சென்னி வைத்துகந்தீர்
மங்கையோர் கூறுடையீர் மறையோர்கள் நிறைந்தேத்தப்
பங்கயஞ்சேர் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே. 3

3. கங்காநதி சேர்ந்த சடைமுடியினை உடையீர், காலனை முன்னே (மார்க்கண்டர்க்காக) அழித்து அசனுல் காலகாலன் எனப் பெயர் பெற்று உயர்ந்தீர், சந்திரனுடன் இளமையான பாம்பையும் விளங்குகின்ற சிரத்தினில் வைத்து மகிழ்ந்தீர், உமாதேவியாரை ஒரு கூருகத் திரு மேனியில் உடையீர், மறைகளைப் பயின்றவர்கள் நிறைந்து துதிசெய்யும்படி தாமரை மலர்கள் நிறைந்த **திருவேணு புரத்தை** உமது பதியாகக் கொண்டீர்.

உகத்தல் — இச்சொல் உயர்தல், மகிழ்தல் **என்ற** இரு பொருளையும் தருமாதலால் முதலடியில் **உயர்ந்தீர் என்றும்** அடுத்த அடியில் **மகிழ்ந்தீர்** என்றும் பொருள் **உரைக்கப்** பட்டது.

மறையோர்கள்—வேதங்களைப் பயின்றவர்கள், அதாவது அந்தணர்கள்.

நீர்கொண்ட சடைமுடிமேல் நீள்மதியம் பாம்பிைெடும்
ஏர்கொண்ட கொன்றையினே டெழில்மத்தம் இலங்கவே
சீர்கொண்ட மாளிகைமேற் சேயிழையார் வாழ்த்துரைப்பக்
கார்கொண்ட வேணுபுரம் பதியாகக் கலந்தீரே. 4

4. கங்கை நீரைக் கொண்ட சடைமுடியின் **மேல்** பிறைச் சந்திரனைப் பாம்பினேடும், அழகு மிக்க கொன்றை யினேடு எழில் மிக்க ஊமத்த மலரும், விளங்கும்படி வைத்து, பெருமை மிக்க மாளிகைகளின் மேல் பெண்கள் வாழ்த்துப் பாடல்களைப் பாட, மேகங்கள் தவழுகின்ற **திருவேணு புரத்தை** உமது இருப்பிடமாகக் கொண்டருளினீர்.

சடைமுடி மேல் மதியம் பாம்பினோடும் இலங்க என்றும் கொன்றையினோடு எழில் மத்தம் இலங்க என்றும் ஈரிடத்தும் கூட்டிப் பொருள் காண்க.

சீர் கொண்ட மாளிகை என்றதனால் நகரிலுள்ள உயர்ந்த வீடுகளைக் குறிப்பிட்டார். வீடுகளின் மாடங்களின் மேல் நின்று பெண்கள் கூடி வாழ்த்துப் பாடல்களைப் பாடுவர் என்றதாம்.

ஆலைசேர் தண்கழனி அழகாக நறவுண்டு
சோலைசேர் வண்டினங்கள் இசைபாடத் தூமொழியார்
காலையே புகுந்திறைஞ்சிக் கைதொழமெய் மாதினொடும்
பாலையாழ் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே. **5**

5. கரும்பாலைகள் சேர்ந்த குளிர்ச்சி பொருந்திய வயல்களிலே (உள்ள தாமரை மலர்களில்) தேனையுண்டு சோலைகளைச் சென்றடைகின்ற வண்டினங்கள் அழகாக இசைகளைப் பாட, அந்த காலை நேரத்திலேயே தூய்மையான மொழிகளை உடையவர்கள் கோயிலுக்குள் புக்கு வணங்கிக் கைதொழும்படி உமாதேவியாரொடும் பாலையாழ் பயிலப்படும் திருவேணுபுரத்தை உமது திருப்பதியாகக் கொண்டு எழுந்தருளினீர்.

ஆலை — கரும்பாலை; **நறவு** — தேன்

ஆலை என்பதற்குக் கரும்பு என்றே கொண்டு கரும்புகள் நிறைந்த வயல் எனவும் பொருள் கொள்ளலாம்.

தூமொழியார் — தூய்மையான மொழிகளை அதாவது இறைவனது புகழ்களையே பாடும் ஆண்பாலரும் பெண்பாலருமாகிய அடியவர்கள். கோயிலில் வழிபாடு செய்யும்போது இறைவனது சார்பல்லாத வேறு எவ்வகையான சொற்களையும் பேசலாகாது என்பதையும் இச்சொற்றொடர் சுட்டிக் காட்டுகின்றது.

தூமொழியார் என்பதற்கு மகளிர் என்றே பொருள் கொண்டனர் முந்தைய உரைகாரர். தூய்மையான மொழி

களைப் பேச மகளிரே முழு உரிமையுடையார் என்பது அவர் கருத்துப் போலும்!

இத்திருப்பாடல் பண்டு அடியவர்கள் நாடோறும் தவருது திருக்கோயிலுக்குக் காலையில் சென்று வழிபட்டார்கள் என்பதையும் நமக்குக் காட்டுகின்றது.

பாலையாழ் — நாற்பெரும் பண்களுள் ஒன்று. மற்றைய மூன்று குறிஞ்சி, மருதம், செவ்வழி என்பனவாம்.

மணிமல்கு மால்வரைமேல் மாதினெடு மகிழ்ந்திருந்தீர்
துணிமல்கு கோவணத்தீர் சுடுகாட்டில் ஆட்டுகந்தீர்
பணிமல்கு மறையோர்கள் பரிந்திறைஞ்ச வேணுபுரத்(து)
அணிமல்கு கோயிலே கோயிலாக அமர்ந்தீரே. 6

6. அழகு மிகுந்த பெரிய திருக்கயிலாய மலையின்மேல் உமாதேவியாரோடும் மகிழ்ந்திருந்தீர், துணியினுல் அமைந்த கோவணத்துடன் சுடுகாட்டில் நடனமாடுதலை மகிழ்ந்திருந்தீர், திருத்தொண்டு செய்தலை மிகவுடைய மறையோர்கள் அன்புடன் உம்மை வணங்கத் **திருவேணு புரத்து** அழகுமிக்க கோயிலையே உமது இருப்பிடமாக எழுந்தருளி இருந்தீர்.

இத்திருப்பாடல் முதல் அடிக்குச் சீகாழியில் தோணி புரம் என்னும் மலைக்கோயிலில் வீற்றிருந்தீர் எனப் பொருள் கொண்டனர் முந்தைய குறிப்புரைகாரர். **மால்வரை** என்றமையால் திருக்கயிலாய மலையினையே குறிப்பிட்டதாகுமே யன்றி, சீகாழி மலைக்கோயிலைக் குறிப்பிட்டதாகாது என்பது எம் கருத்து. மேலும் (மால்வரை) கயிலையில் வீற்றிருந்த நீர் வேணுபுரம் பதியாகக் கொண்டீர் என்று இறைவனது பெருமையையும் எளிமையையும் ஒருங்கே கூறுதல் ஞானத் தமிழாகரரின் திருவுள்ளமாய் இருத்தல் கூடும் எனக் கொள்க.

துணிமல்கு — கோவணம் என்ற பொதுமை நோக்கி துணி மல்கு எனக் கூறியருளினுர். **துன்னம்பெய் கோவணம்**

என்பதற்கு இரண்டாவது திருப்பாடல் உரையில் கூறியவை காண்க. **மல்குதல்** — மிகுதல் என்ற பொருளில் வந்தது.

துணி — தறியினின்றும் துணித்து (துண்டு படுத்தி) எடுக்கப்படுதலின் இப்பெயர் பெற்றது.

ஆட்டு — கூத்து, திருநடனம்.

பரிந்து — அன்பு கொண்டு' **அணி** — அழகு

நீலஞ்சேர் மிடற்றினீர் நீண்டசெஞ் சடையினீர்
கோலஞ்சேர் விடையினீர் கொடுங்காலன் தனைச்செற்றீர்
ஆலஞ்சேர் கழனியழ கார்வேணு புரம்அமருங்
கோலஞ்சேர் கோயிலே கோயிலாக் கொண்டீரே. 7

7. நீலநிறம் சேர்ந்த கழுத்தினை உடையீர், நீண்டு சிவந்ததான சடையினை உடையீர், அலங்காரம் செய்யப் பட்ட எருதினை ஊர்தியாக உடையீர், கொடிய காலனை அடக்கியருளினீர், நீர்வளம் மிக்க கழனிகளால் அழகு பொருந்திய திருவேணுபுரத்து அழகிய திருக்கோயிலையே தேவரீர் விரும்பி அமரும் உறைவிடமாகக் கொண்டு அருளினீர்.

நீலம் — விடம் உண்டதனால் ஏற்பட்ட நீலநிறம்.

நீலஞ்சேர் மிடற்றீர் — திருநீலகண்டப் பெருமானே என்றழைத்ததாம்.

கோலம் —அலங்காரம், வேடம், அழகு முதலிய பொருள் களைத் தரும். எருதுக்குக் கொள்ளும் போது அலங்காரம் என்றும் கோயிலுக்குக் கொள்ளும்போது அழகு என்றும் பொருள் கொள்ளப்பட்டது.

இரைமண்டிச் சங்கேறுங் கடல்சூழ்தென் னிலங்கையர்கோன்
விரைமண்டு முடிநெரிய விரல்வைத்தீர் வரைதன்னில்
கரைமண்டிப் பேரோதங் கலந்தெற்றுங் கடற்கவினார்
விரைமண்டு வேணுபுர மேயமர்ந்து மிக்கீரே. 8

8. இரைதேடுதலின் மேற்சென்று சங்குகள் மேலே ஏறுகின்ற கடல் சூழ்ந்த தென்னிலங்கையரது அரசனாகிய இராவணனது மணம் நிறைந்த தலைகள் நெரியும்படி மலையின்மேல் விரலை ஊன்றினீர். (அத்தகைய பெருமையினீராகிய தேவரீர்) கரையினை நெருங்கிப் பெரும் நீரானது மோதுகின்ற கடலினால் அழகு பொருந்திய மணம் மிக்க **திருவேணுபுரத்தையே** கோயிலாகக் கொண்டு சிறந்து விளங்கியருளினீர்.

மண்டுதல்—மேற்செல்லுதல், நெருங்குதல், மிகுதல் முதலிய பொருள்களைத்தரும்.

விரை மண்டு முடி: விரை—மணம், இராவணனது தலைகளில் மலர் மாலைகளைச் சூடியிருத்தலால் அதனால் ஏற்பட்ட மணம் என்க.

பேரோதம்—பெருத்த நீர் வெள்ளம்; **எற்றுதல்**—மோதுதல்; **கவின்**—அழகு.

தீயோம்பு மறைவாணர்க் காதியாந் திசைமுகன்மால்
போயோங்கி இழிந்தாரும் போற்றரிய திருவடியீர்
பாயோங்கு மரக்கலங்கள் படுதிரையால் மொத்துண்டு
சேயோங்கு வேணுபுரஞ் செழும்பதியாத் திகழ்ந்தீரே. 9

9. அக்னிஹோத்திரம் முதலியவைகட்காக எரியினைப் பாதுகாத்து வரும் மறையவர்களின் முதல்வனாகிய நான்முகனும், திருமாலும் மேலே (அன்னப்பறவையாய்) ஓங்கியவரும் (பன்றியாய்) இழிந்தவரும் ஆகிய இவ்விருவராலும் கண்டு வணங்கப் பெறுதற்கரியனவாகிய திருமுடியையும் திருவடியையும் உடையீர். கடலலைகளால் மோதப்பெற்று ஓங்குகின்ற பாய்களையுடைய மரக்கலங்கள் நிறைந்ததும், மிகவும் உயர்ந்து விளங்கியதுமான **திருவேணுபுரத்தினையே** உமது செழுமை மிக்க உறைவிடமாகக் கொண்டு விளங்கினீர்.

தீயோம்புதல் — முன்னாளில் பிராமணர்களது இல்லங்களில் என்றும் அணையாது 'தீ' (எரி)யானது பாதுகாக்கப்

படும். இந்த எரியிலே அந்தணர்கள் அக்னிஹோத்திரம், ஓமங்கள் முதலிய கருமங்களைச் செய்வார்கள், பின்னர் அவர்கள் மரணமடையும் போது இந்த எரியே அவர்களது உடலை எரித்தற்கும் கொள்ளப்படும்.

'அஞ்சிப் போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி' என்ற அப்பரடிகளின் வாக்கும், 'கற்றுங்கெரியோம்பிக் கலியை வாராமே செற்றூர் வாழ் தில்லைச் சிற்றம்பலம்......' என்ற ஞானத்தமிழாகரரின் வாக்கும் எரியோம்புதலின் சிறப்பைப் புலப்படுத்துதல் கண்டு கொள்க.

பிராமணர்கள் பிரமதேவனது முகத்தினின்றும் தோன்றியவர்கள் என்று கூறப்படுதலால் பிரமதேவனை மறைவாணர்க்கு ஆதி என்று கூறி அருளினூர் போலும்.

திருவடியீர் என்று கூறினூரேனும், பிரமதேவனின் செயலும் இப்பாடலிற்குறிப்பிடப்பட்டமையால் திருமுடியையும் திருவடியையுமுடையீர் என்று எம்மால் சேர்த்துப் பொருள் உரைக்கப்பட்டது

நிலையார்ந்த உண்டியினர் நெடுங்குண்டர் சாக்கியர்கள்
புலையாளுர் அறவுரையைப் போற்றுதுன் பொன்னடியே
நிலையாகப் பேணிநீ சரணென்றூர் தமையென்றும்
விலையாக ஆட்கொண்டு வேணுபுரம் விரும்பினையே. 10-11

திருச்சிற்றம்பலம்

10. நின்று கொண்டே உண்பவராகிய பெருங்குண்டர்களாகிய சமணர்களும் சாக்கியர்களுமாகிய இழிந்தவர்களது உபதேச மொழிகளைச் சிறிதும் மதிக்காது உமது பொன்னூர் திருவடிகளையே என்றும் மாறுதலில்லாமல் போற்றி "நீயே எமக்குச் சரண்" என்று அடைக்கலம் புகுகின்ற அடியவர்களை எக்காலத்தும் விலை கொடுத்துப் பெற்ற பொருளாக ஆட்கொண்டு திருவேணுபுரத்தை விரும்பி எழுந்தருளினீர்.

நிலையார்ந்த உண்டியினர் — உட்கார்ந்து உணவு கொண்டால் உடலுக்குச் சுகம் தந்ததாகும் என்று கருதி அவ்வுடலை ஒறுக்குமுகத்தான் சமணகுருமார்கள் என்றும்

நின்று கொண்டே உணவருந்துவார்கள். எனவே அவர்களை நிலையார்ந்த உண்டியினர் எனக் குறிப்பிட்டருளினார் பிள்ளையார்.

நெடுங்குண்டர் — இச்சொல் உண்டியினர், சாக்கியர் என்ற இரு சொற்களுக்கும் இடையில் வந்தமையால் இவ்விருவரையுமே குண்டர்கள் எனக் கூறியதாகக் கொள்க.

குண்டர்கள் — கீழோர்கள் என்ற பொருளில் வந்ததாகக் கொள்க.

புலையானார் அறவுரை — புலையானார் என்பது மிக்க இழிந்த தன்மையினையடைந்தவர்கள் என்ற பொருள் தரும். எனவே இழிந்தோர் கூறும் அறவுரை எத்தன்மையதாய் இருக்கும் எனக் கூறலும் வேண்டுமோ? எனவே அறவுரை என்ற பெயரில் அவர்கள் கூறும் பொய்யுரைகளைச் சிவ பக்தர்கள் ஒருநாளும் மதிக்கமாட்டார்கள் எனக் கொள்க

நீ சரண் —'நீயே சரண்' எனக் கொள்க. சிவபிரானைத் தவிர வேறொரு பற்றுக்கோடில்லாதவர்களே மெய்யடியார்கள் ஆவர்.

விலையாக ஆட்கொண்டு — மேற்கூறிய மெய்யடியார்களை விலை கொடுத்துப் பெற்ற பொருளை மிக்க உரிமையுடன் பாதுகாப்பது போலப் பாதுகாத்து என்று கொள்க.

இதற்குத் திரு. பி. மா. சோ. அவர்கள் கூறும் விளக்கம்: "இறைவன் உயிர்களை ஆட்கொள்ளும் போது அவனையே விலையாகத் தந்து உயிர்களாகிய அடிமைகளைப் பெற்று ஆட்கொள்ளுகின்றான். இஃது ஏனைய மூன்று குருமாருங் கூறுவதே. மாணிக்கவாசகப்பெருமான் இவ்வணிக நெறியினைத் தெளிவாக அழகுற விளக்குகின்றார். "தந்ததுன் தன்னைக் கொண்டதென்றன்னைச் சங்கரா யார்கொலோ சதுரர்" என்று நகைச்சுவை துளும்பக் கூறல் காண்க."

குறிப்பு : இத்திருப்பதிகத்தின் 11-வது திருப்பாடல் சிதைந்துபோய்க் கிடைக்காதாயிற்று.

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருப்பாடல் முதற்குறிப்பகராதி

திருப்பாடல் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

சிவம்

எனே ஆளும் ஈசன் செயல்

இப்பன்னிரண்டாவது தமிழ்மாலே வெளியீடு 15-10-82 என்று உள்தலேப்புப்பக்கத்தில் கொடுத்திருந்தும் 2-11-82 அன்று தான் அச்சுப்பணி முடிவடைந்தது. இதுவும் எனே ஆளும் ஈசன் செயலே என்று கொண்டு அமைதியடைகின்ருேம்.

—பதிப்பாசிரியர்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளியது.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்



யத்யத் கர்ம கரோமி

தத்ததகிலம்

சம்போ தவாராதனம்

Elango Achukoodam, 166, R. H. Road, Mylapore, Madras-600004.